Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 28

ஞாயிற்றுக்கிழமை
24 டிசெம்பர் 2023

மார்கழி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"திரும்பவும் எல்லாரும் முகக்கவசம் போட்டுக்கொண்டு திரியிறதுதான் நல்லது போல"

# கொரோனா அபாயம் வடக்கில் இல்லை!

## டெங்கு தொடர்பில் அவதானம் வேண்டும் என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

கொரோனா தொடர்பில் வடக்கு மாகாண மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதுவரை கொரோனாத் தொற்றுத் தொடர்பில் வடக்கில் எந்தவொரு சம்பவமும் பதிவாகவில்லை. டெங்கு தொடர்பிலேயே அவதானம் தேவை. தினமும் 100 க்கும் குறையாதவர்கள் டெங்குத் தொற்றால் சிகிச்சை பெறுகின்றனர் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

15

## மீண்டும் மாஸ்க்!

கொழும்பு, டிசெ. 24
நாட்டில் வாழும் மக்கள் மீண்டும் முகக் கவசம் அணியுமாறு சிறி ஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்ப்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர அறிவுறுத்தி

16

## யாழ். போதனாவில் டெங்கு நோயாளர்களுக்காக புதிதாக இரண்டு விடுதிகள் திறப்பு

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
130,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## பண்டிகைக்காலத்தில் பதற்றத்தை ஏற்படுத்திய கொரோனா உயிரிழப்பு

விரிவு - பக்:02




### விஞ்ஞான ரீதியில் உறுதியானது மூத்த விரிவுரையாளர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 24
கடந்த ஜூலை மாதம் கந்தரோடையில் இடம்பெற்ற அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட மூலாதாரங்கள் 2 ஆயிரத்து 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று உதய காலத்துக்குரியவையாக விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை மூத்த விரிவுரையாளர் சிவரூபி சஜிதரன்

15

## கொரோனாத் தொற்றாளர்கள் 52 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 24
உலகளாவிய ரீதியில் கடந்த ஒரு மாதத்தில் புதிய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 52 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம்

16

## 8 கிராம் ஹெரோய்னுடன் தாவடியில் ஒருவர் கைது

### அதிகூடிய எடையுடன் மீட்கப்பட்ட சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
8 கிராம் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் தாவடியில் 34

16

### மயிலத்தமடுவில்

## 100ஆவது நாளாக நேற்றும் போராட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 24
மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை நிலத்தை அரச அனு

15

## இணையம்மூலம் வலைவிரிப்பு; லட்சக்கணக்கான பணம் 'அம்போ'!

யாழ்ப்பாணம், டிசெ. 24
இணையம் ஊடாகப் பணம் உழைக்கலாம் என்று ஆசைகாட்டி யாழ்ப்பாணத்தில் பல இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. பணத்தை இழந்தவர்கள் தற்போது பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்தார்.
இணையத்தின் ஊடாகப் பணம்

14

## மின்வெட்டை தவிர்க்கவும்

கொழும்பு, டிசெ. 24
எதிர்வரும் நீண்ட விடுமுறை நாள்களில் மின்வெட்டைத்

16

### அரசியல் கைதிகள் விடுவிப்பு

## ஜனாதிபதிக்கு மனு

யாழ்ப்பாணம், டிசெ. 24
சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்

15

## மதுபானசாலைகள் இரு நாள்கள் பூட்டு

கொழும்பு, டிசெ. 24
கிறிஸ்மஸ் மற்றும் போயா தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை

16

## வர்த்தக நிலையம் உடைத்து பணம், பொருள்கள் திருட்டு!

கரவெட்டி, டிசெ. 24
கரவெட்டியில் வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

16

## எரிபொருள் தடையில்லாது விநியோகம்

கொழும்பு, டிசெ. 24
பண்டிகைக் காலத்தில் எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக

16

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை - இந்தியா இடையே நீருக்கடியில் மின் இணைப்பு!

## இரு நாடுகளிடையே இணக்கப்பாடு

**கொழும்பு, டிசெ.24**

**இலங்கை - இந்தியா இடையே மின் இணைப்பை மேற்கொள்ள நீருக்கடியில் மின் இணைப்புக் கேபிளை இணைப்பதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்று இந்தத் திட்டத்தில் பணியாற்றும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இலங்கை மின்சாரசபை மற்றும் பவர் கிரிட் கோப்ரேஷன் ஒப் இந்தியா லிமிடெட் மற்றும் இரண்டு நாடுகளின் துறைசார் அமைச்சுகளுக்கிடையில் நடைபெற்று வரும் பேச்சுகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருநாட்டுத் துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள் தலைமையிலான கூட்டுப் பணிக்குழுவுக்கு அனுப்பப்படும் தொழில்நுட்ப அறிக்கையும் இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில் இந்திய அதிகாரிகளுடன் ஒரு மெய்நிகர் கலந்துரையாடலை இலங்கை அதிகாரிகள் நடத்தியுள்ளனர். அதில் கடலுக்கடியில் கேபிள் இணைப்புஒப்பந்தத்துடன்தொழில்நுட்ப அறிக்கையின் முன்மொழிவுகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இறுதி அறிக்கை இன்னும் தயாரிக்கப்படவில்லை எனவும் திட்டத்தில் பணியாற்றும் குறித்த அதிகாரி கூறியுள்ளார். (எ-இ)

# கொரோனாத் தொற்றால் நேற்று ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ.24

கொரோனாத் தொற்றால் ஒருவர் கண்டி தேசிய மருத்துவமனையில் நேற்று உயிரிழந்துள்ளார். சுமார் ஒரு ஆண்டுக்குப் பின்னர் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு இதுவாகும்.

கம்பளை, ஹேத்கல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதான ஒருவரே உயிரிழந்தவராவார். கொரோனாத் தொற்று அறிகுறிகளுக்கு இணையான அறிகுறிகளுடன் இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்த நிலையில், பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# மாட்டுத் திருடர்கள் மடக்கிப்பிடிப்பு

வவுனியா, டிசெ. 24

சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்த நிலையில் நேற்றுமுன்தினம் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் வாகனமும் கைப்பற்றப்பட்டது. (அ-ஒ-110)

# விருந்தில் மயங்கிய மஹிந்த ராஜபக்ச

கொழும்பு, டிசெ. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்சவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விசேட இரவு விருந்தொன்றை ஷங்ரிலா ஹோட்டலில் வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் எவ்வாறு அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் இங்கு நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இரவு விருந்துக்கு மறுநாள் திங்கட்கிழமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, வெளியிட்ட அறிவிப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக கருத்துகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## பொலிஸுக்கு

# ஓட்டம் காட்டியவர்கள் காருடன் மோதினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 24

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக வேகமாகச் சென்றபோது காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதி, கந்தர்மடம் சந்தியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றது. காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நல்லூரில் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது அவ் வீதியில் வந்த இரண்டு இளைஞர்கள் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். போக்குவரத்துப் பொலிஸார் இரண்டு இளைஞர்களும் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளைத் துரத்திச் சென்றனர். பொலிஸாரிடமிருந்து தப்பித்துச் செல்வதற்காக அதி வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் கந்தர்மடம் சந்தியில் பயணித்த காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

சம்பவ இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தப்பித்தோடிய நிலையில் மற்றொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-இ)

# தங்கச் சங்கிலியை அறுத்தவர் கைது!

பருத்தித்துறை, டிசெ. 24

வடமராட்சி, வதிரியில் வீதியால் நடந்து சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வதிரி, உல்லியநெல்லை அம்மன் வீதியால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடந்து சென்ற பெண் அணிந்திருந்த ஒன்றே முக்கால் பவுண் தங்கச் சங்கிலி துவிச்சக்கர வண்டியில் பின்னால் வந்தவரால் அறுத்து செல்லப்பட்டிருந்தது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுச் சனிக்கிழமை காலை சந்தேகநபரை கைது செய்தனர். தங்கச் சங்கிலி வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-100)

# சிறுமிகளின் அனுமதியுடனேயே அதிகளவு துஷ்பிரயோகங்கள்!

## கண்டி மருத்துவர் தகவல்

கொழும்பு, டிசெ. 24

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் 6 ஆயிரத்து 37 பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 5055 சம்பவங்கள் சிறுமிகளின் சுயவிருப்பத்துடனேயே இடம்பெற்றுள்ளன.

கண்டி மருத்துவமனை மருத்துவர் பாலித பண்டார சுபசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

17 வயதுக்குக் குறைந்த ஒருவருடன் பாலியல் உறவு கொள்வது பாலியல் துஷ்பிரயோகமாகவே கருதப்படுகிறது. கண்டியில் 132 பாலியல் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில் 15 சம்பவங்கள் மட்டுமே பலவந்தமாக நடைபெற்றுள்ளன எனப் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)



# இலங்கை விடயத்தில் தலையிடாது ரஷ்யா!

கொழும்பு, டிசெ.24

ரஷ்யா ஒருபோதும் இலங்கையின் உள்விவகாரங்களை விமர்சிக்காது என்பதுடன் அதில் தலையிடாது எனவும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இறையாண்மை உள்ள நாடாக இலங்கை தனது சுயாதீனமான வெளிநாட்டுக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். (எ-இ)

# மூதாட்டியின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

பருத்தித்துறை, டிசெ. 24

கரவெட்டியில் தனிமையிலிருந்த மூதாட்டியின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் வீட்டில் இருந்த பொருள்கள் சேதம் அடைந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டியின் வீட்டின் மீதே பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-100)

# வெங்காயத்தைத் தவிருங்கள்

கொழும்பு, டிசெ. 24

வெங்காய மாபியாக்களுக்கு முடிவுகட்ட, வெங்காயம் சாப்பிடுவதை ஒரு மாதத்துக்கு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று தேசிய மகளிர் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாவது-

வெங்காயத்தின் விலை உச்சம் தொட்டுள்ளது. ஒரு கிலோ 600 முதல் 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. சுப்பர் மார்க்கெட்டுக்குச் சென்றால் வெங்காயத்துக்கு ஒரு விலை. சதொசவுக்குச் சென்றால் மற்றுமொரு விலை. சில்லறை வியாபார நிலையங்களுக்குச் சென்றால் அங்கு வேறொரு விலை. எனவே, அரசு என்ற வகையில் ஆட்சியாளர்களால் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியாதா? அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் இதன் பின்னணியில் ஏதேனும் 'டீல்' வைத்துள்ளனரா என்ற சந்தேகமும் உள்ளது. ஒரு மாதத்துக்கு நாம் வெங்காயம் சாப்பிடாமல், அதனைப் புறக்கணிப்போம். அப்போது வெங்காய மாபியாக்களுக்கு நல்ல பாடத்தைப் புகட்ட முடியும் - என்றார். (ரி-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போதைக்கு எதிரான வேட்டை

## பருத்தித்துறையில் 6 நாளில் 30 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 24

பருத்தித்துறைப் பொலிஸாரால் மோப்பநாயின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின்போது 30 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தலைமையில் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வாரம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வரையான 6 நாள் களிலேயே ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 16 பேரும், கசிப்புடன் நான்கு பேரும், கஞ்சா மற்றும் போதைமாத்திரைகளுடன் தலா இருவர் உள்ளடங்கலாக 30 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

போதை ஒழிப்புச் சோதனை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்றும் பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

(ச-100)



## சமாதான நீதிவானாக ச.தயாபரன் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் சமூக சேவையாளருமான சண்முகசுந்தரம் தயாபரன் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக, சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி எ.யூட்சன் முன்னிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றவரான இவர், வடக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதமசெயலாளர் அலுவலகத்தில் பிரதமமுகாமைத்துவசேவை உத்தியோகத்தராக பணியாற்றிவருகிறார்.

(ச-131)

# போதை வியாபாரம்; பெண்ணுக்குமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 24

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து அண்மையில் 19 கைத் தொலைபேசிகள், ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்ட ஆறு இலட்சத்து 78 ஆயிரத்து 900 ரூபா பணம் என்பன மீட்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட பெண்ணை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடு தழுவியதாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போதைப்பொருள் ஒழிப்பில் குறித்த பெண் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபரான பெண்ணை பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்படுத்தியபோதே எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

(ரி-100)

# ஐவர் கைது

வவுனியா, டிசெ.24

வவுனியாவில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 16 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் அதை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உட்பட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்தில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலே மூவரும் கைதுசெய்யப்பட்டரென பொலிஸார் தெரிவித்தனர்.

(ரி-110)

# விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 24

நெல்லியடி மாலிசந்திப் பகுதி யில் குற்றச்செயல்களுடன் கைதுசெய்யப்பட்டவரை எதிர் வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந் தன் பொன்னுத்துரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த வியாழக்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினரால் மாலிசந்திப் பகுதியில் நான்கு வாள்கள் மற்றும் 108 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரையே விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

(ரி-100)

# பொதுக்கூட்டம்

யாழ்.பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பொதுக் கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் அழைப்புவிடுத்துள்ளார்.

(ரி-66.125)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.24

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய தேசிய மட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை திறந்த வெளி அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வை.பிரதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவர் ப.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(ரி-36)

YARL VISION HINDU ORGANIZATION

'யாழ் விஷன் நுண்கலைக் கல்லூரி' யின்
"ஓதுவார் மூர்த்திகள் ஓராண்டு பயிற்சி நெறி"

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெலாம்"
பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக்கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி போற்றி

உலகெலாம் தெய்வமணம் கமழும் திருநெறிய திருமுறை இசையினை சைவர்கள் அனைவரும் விருப்புற்று நாளும் இன்னிசையால் சிவப்பரம் பொருளை நினைக்க, ஆராதித்து போற்றி உவந்து ஏற்றம் பெறும் வண்ணம் இம்மண்ணில் நலமாக வாழ உடலுக்கும் உயிருக்கும் உறுதி பயக்கும் பண் இசையினை மரபு முறைகளுடன் பயிற்றுவித்து நாளும் இறையின்பால் ஓதுவார் மூர்த்திகளாக உருவாக்கும் ஓராண்டு கற்கைநெறி **"ஓதுவார் மூர்த்தி சான்றிதழ் பயிற்சி"** திருவருள் துணையுடன் முதன் முதலாக திருநோக்கம் செய்யப்படுகின்றது. **இக்கற்கைநெறிக்கு சைவத்தின் மீது பற்றுள்ளவர்கள் எவரும் விண்ணப்பிக்கலாம்.** சைவப்பண்பாட்டுச் சூழலில் உலகெலாம் வியாபித்திருக்கின்ற சைவப்பெருமக்கள் தங்களுடைய சைவப் பெரும்பண்பாட்டின் தொன்மையினையும் பாரம்பரிய பண்பாட்டு மரபினையும் செழுமையுடன் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இக்கற்கைநெறி பெரும் வரமாக அமைகின்றது. ஓராண்டு சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கும் ஓதுவார் மூர்த்திகள் கற்கைநெறி தொடர்ந்து வரும் உயர் வளர்ச்சிக் கற்கை நெறிகளுக்கெலாம் திறவுகோலாக அமைகின்றது.

**இக்கற்கைநெறியானது பேராசிரியர் திருமுறைக்கலாநிதி முனைவர் நா.வி.முருகேசு - நவரத்தினம்**
மற்றும்
**திருமுறை இசை ஆய்வாளர்கள், திருமுறை இசையாளர்களால் பயிற்றுவிக்கப்படும்.**
இக்கற்கைநெறியினை சைவத்தின் மீதும், திருமுறை மீதும் பற்றுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:- எமது நிறுவனத்தில் நுண்கலைப் பிரிவின் பின்வரும் புதிய கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.**

**பண்ணிசை, வாய்ப்பாட்டு இசை (கர்நாடக சங்கீதம்)**

| | |
|---|---|
| வீணை | : திரு.ஆறுமுகம்பிள்ளை சத்யசீலன் முதுவிரிவுரையாளர் (ஓய்வுநிலை) இசைத்துறை யாழ் பல்கலைக்கழகம் |
| பரத நாட்டியம் | : "நிருத்திய தலைக்கோலி" திருமதி தனுசா சிவமைந்தன் (BFA Bharatham, கலாவித்தகர்) |
| மிருதங்கம் | : திரு.வரதராஜசர்மா ரமண சர்மா |
| வயலின் | : திருமதி வனஜா ஈஸ்வர சர்மா |

**இடம்: 1. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**
**2. 4ஆம் ஒழுங்கை, அம்மன் வீதி, கொக்குவில்.**

தொடர்புகளுக்கு:
021 221 0090, 076 772 0059, 076 243 0394
தொடர்புகொள்ளும் நேரம்:காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

(CS 27455) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### செல்லையா தம்பிராசா (குஞ்சையா)

தோற்றம்
19.03.1931

மறைவு
19.12.2023



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மற்றும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிராசா (விழிப்புலனற்றவர்) அவர்கள் 19.12.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினப்பிரகாசம் கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், இரத்தினாம்பிகை அம்பாளின் (யசோதா) அன்புக்கணவரும், சண்முகப் பிரியனின் (இசையமைப்பாளர் பிரியன் தம்பிராஜ்) அன்புத் தந்தையும், ஷாலினியின் அன்பு மாமனாரும் சுபீட்ஷனன், புகழிசை ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ் சென்றவர்களான அப்பாதுரை, கமலாட்சி ஆகியோரின் சகோதரரும் சோமஸ் கந்தபிள்ளையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் சுயவிருப்பத்திற்கிணங்க யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.29, வினாசித்தம்பி வீதி,**
**சாவக்சேரி.**
**077 844 9744**
**077 248 7861**

**தகவல்:**
**மகன் சண்முகப்பிரியன்**

(CS 27463) S-1

## மரண அறிவித்தல்



பிறப்பு: 14.02.1926 — இறப்பு: 23.12.2023

### கந்தையா நடராசா

சாயுடை மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா அவர்கள் நேற்று (23.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வயிரவி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னத்துரை, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் சின்னத்தங்கச்சி, பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தவமணி மற்றும் தங்கமணி, இராசரத்தினம் (ஜேர்மனி), சிவமணி, விசியமணி, காலஞ்சென்ற ரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), ஞானசம்பந்தர், இராதாமணி (ஜேர்மனி), சிவசுப்பிரமணியம், உருத்திரகுமார் ஆகியோரின் மாமனாரும், ஜீவன் (டென்மார்க்), ஜெகன் (பிரான்ஸ்), ஜெனோ (டென்மார்க்), தனஜன் (டென்மார்க்), ஜனனி (சுவிஸ்), கஜனி (கனடா), கரன், தயாபரன் (பிரான்ஸ்), நிருசா (ஜேர்மனி), நிலான் (ஜேர்மனி), நிதினி (ஜேர்மனி), மகிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் சுரேகா, வசந்தினி, கௌசல்யா காலஞ்சென்ற அனா மற்றும் செந்தூர்நாதன், திருமாமளவன், நிரோஜா, சுசி, ரங்கன் ஆகியோரின் பேரனும், அர்யுன், ஆரதி, டிலக்ஷினி, தாருகா, சபீனா, அபிஷா, இமானுவேல், கிளாறா, லுகாஸ், யதுசன், சபினா, கோபி, வர்சா, தேனுஜா, சபினா, சமீரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாயுடை,**
**மாவிட்டபுரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 950 6879**

(CS 27417) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு
31.10.1982



உதிர்வு
23.12.2023

### பாலசுந்தரலிங்கம் மதனகுமார்

**(இலங்கை வங்கி உத்தியோகத்தர், ஓட்டுசுட்டான்)**

கலைமகள் இல்லம் மாயக்கை தம்பசிட்டியை வசிப்பிடமாக கொண்ட அமரர் பாலசுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அமரர் சரஸ்வதி தம்பதியரின் மகனும், இரத்தினகுமார் (அவுஸ்திரேலியா), இரதிவதனி (பிரபல சோதிடர்), மன்மதகுமார் (தபால் உத்தியோகத்தர், குடத்தனை) மதிவதனி, மன்மதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராசா (லண்டன்), சிவகணேசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் (கரவெட்டி பிரதேச செயலகம்), யசோ (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தேனுசன், பிரகலாதன், பிரபல்யா ஆகியோரின் சித்தப்பாவும், லண்டனைச் சேர்ந்த மோகனவர்மன், தனுவர்மன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கரகம்பன் மந்திகை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தொடர்பு: 021 226 3733**

(CR 41381) A-1

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
31.10.1982



உதிர்வு
23.12.2023

அமரர்

### பாலசுந்தரசிங்கம் மதனகுமார்

(ஊழியர் – இலங்கை வங்கி, ஒட்டுசுட்டான்)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்

**உதவிப் பொது முகாமையாளரும்**
**ஊழியர்களும்**
**இலங்கை வங்கி, வட மாகாணம்.**

(CS 27462) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய ஏற்றுமதி இந்தியா தடைநீடிப்பு

## இலங்கையில் தாக்கம்

**கொழும்பு, டிசெ. 24**
**வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடை, இலங்கையில் பெரும் தாக்கத்தைச்செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை இந்தியா மேலும் மூன்று மாதங்களுக்கு நீடித்துள்ளது.
மொத்தச் சந்தையில் உள்ளூர் வெங்காயம் வரத்து இல்லாததால், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.
பல சில்லறை விற்பனை நிலையங்களில் நேற்றுமுன்தினம் ஒருகிலோ பெரிய வெங்காயம் 600 முதல் 650 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. வரும் நாள்களில் ஒருகிலோ பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை, 700 ரூபாவைத் தாண்டும் என வியாபாரிகள் குறிப்பிட்டனர். (ச-இ)



உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்றச் செயற்பாடுகள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-159)



## 15 பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த வியாழக்கிழமை ஒரே நாளில் டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்பு முன்னெடுக்கப் பட்டது. இந்த நடவடிக்கையில் கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து களமிறங்கியிருந்தனர். (ச-66)





அனலைதீவு - அருணோதயா முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா அண்மையில் கலைநிகழ்வுகளுடன் சிறப்பாக இடம்பெற்றது. (ச-9)

## உயிர்கொல்லி போதைமாத்திரை; இளைஞன் கைது



*யாழ்ப்பாணம், டிசெ. 24*
*தெல்லிப்பழை, வீமன்காமத்தில் 10 உயிர்கொல்லி போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 26 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-23)*

## அல்லைப்பிட்டியில் கண்டல் தாவரங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்தச் செயற்றிட்டத்தின் கீழ் கண்டல் தாவரங்கள் மீள்நடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அல்லைப்பிட்டியில் முன்னெடுக்கப்பட்டது.
யாழ்.மாவட்டச் செயலக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் இந்தச் செயற்பாடு இடம்பெற்றது. (ச-66)



## கேக் விற்பனை 50 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 24
கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை 50 வீதம் குறைவடைந்துள்ளது என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.
நாட்டில் தற்போது நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக அமைகிறது.
கிலோ அளவில் கேக் கொள்வனவில் ஈடுபட்டு வந்த வாடிக்கையாளர்கள் இம்முறை கிராம் அளவில் மட்டுப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## யானைகளால் பயிரழிவு தடுக்க நவீனமயத்திட்டம்

கொழும்பு, டிசெ. 24
விவசாய மற்றும் வாழ்வாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் யானைகளின் இடையூறுகளைத் தடுக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டம் பிரகாசமான ஒளி, அதிவேக ஒலி அலைகள் மற்றும் டிரோன் விமானங்கள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும்
இந்த முன்னோடித் திட்டங்கள் அநுராதபுரம், புத்தளம், அம்பாறை மற்றும் யானை - மனித மோதல்கள் அதிகம் காணப்படும் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

# மன். அல்—அஸ்ஹர் பாடசாலைக்கு 22 வருடங்களாக ஒரே அதிபர்!

## மன்னார் கல்வி வலயம் ஆதரவா? பாடசாலைச் சமூகம் குற்றச்சாட்டு

மன்னார் அல்அஸ்ஹர் தேசியப் பாடசாலையில் 22 வருடங்களாக அதிபர் தரமில்லாத ஆசிரியர் ஒருவரே அதிபராகக் கடமையாற்றி வருகிறார். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் - அபிவிருத்திகள் பின்னடைவை சந்தித்துள்ளன என்று பாடசாலைச் சமூகத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
அவர்கள் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,
மன்னாரில் தேசியப் பாடசாலைகளில் பிரசித்திபெற்ற தேசியப் பாடசாலையில் கடந்த 22 வருடங்களாக, அதிபர் தரம் இல்லாத ஆசிரியர் ஒருவரே முறைகேடான விதத்தில் கடமையாற்றுகிறார். கடந்த காலங்களில் 3 தகுதி பெற்ற அதிபர்கள் நியமிக்கப்பட்டபோதும் பல இடையூறுகள் காரணமாக அந்த அதிபர்கள் பதவியேற்கவில்லை. இதுதொடர்பில் கல்விச் சமூகங்கள் இணைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், கல்வி அபிவிருத்தி என்பன பின்னடைந்து செல்கிறன. எனவே, மாணவர்களின் நலன்கருதி பாடசாலைக்குத் தகுதி வாய்ந்த அதிபர் ஒருவரை உரிய அதிகாரிகள் நியமிக்க வேண்டும் - என்றார்.
இந்த விடயம் தொடர்பாக மன்னார் வலயக் கல்வி அலுவலரைத் தொடர்புகொண்டு போது, "குறித்த விடயம் தொடர்பாக ஊடகத்துக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது" - என்றார். (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருந்திடலே காலத்தேவை!

தென்னாபிரிக்காவில் பின்பற்றப்பட்டதைப்போன்று, 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் மூலம் காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரங்களும் பிரச்சினைகளும் அணுகப்படும். அடுத்த வருடம் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படத்தான் போகின்றது' என்று தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில்திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இலங்கை அரசாங்கத்தால், காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கெனஅமைக்கப்பட்டுள்ள உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்கக்கூட தமிழர்கள் தயாரில்லை. இந்த ஆணைக்குழுவுக்கு தொடர்ச்சியான எதிர்ப்புகளே தமிழர் தாயகத்தில்வெளிப்படுத்தப்படும் நிலையில், 'ஆணைக்குழு வரத்தான் போகின்றது தீர்வைத் தரத்தான் போகின்றது' என்றிருக்கின்றார் ரணில்.

முன்னொருகாலத்தில் வெள்ளையின மேலாதிக்கத்தில் ஊறித்திளைத்த நாடாகதென்னாபிரிக்கா இருந்தது. இதனால் கறுப்பின மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன, நிலங்கள் பறிக்கப்பட்டன, சொத்துகள் சூறையாடப்பட்டன. 'கறுப்பினத்தவர்களின் நரகம்' என்று தென்னாபிரிக்கா வர்ணிக்கப்படுமளவுக்கு அங்கு கறுப்பினத்தவர்களுக்கு எதிரான நிறவெறியும் இனத்துவேசங்களும் நிரம்பியிருந்தன. அத்தனையில் இருந்தும் தென்னாபிரிக்கா இன்று (கொஞ்சமாகவேனும்) மீண்டுவிட்டது. ஆனால், அந்த மீட்சி பகட்டான நடவடிக்கையாகவோ - வெறும் வாய்ச்சொல்லாடல்களை மையப்படுத்தியதாகவோ அல்லது ஆணைக்குழுக்களை நிறுவியதால்மட்டுமோகிட்டவில்லை. உலகின் ஆகச்சிறந்தபொறிமுறைகளைக் கைக்கொண்டே தென்னாபிரிக்கா இனத்துவேசத்திலிருந்துவிடுபட்டது. விடுபட்டது என்பதை விட புதிதாக மீண்டும் கட்டமைக்கப்பட்டது என்பதே இங்கு பொருத்தம்.

நிறவெறித் தலைவரான போந்தா போன்றவர்களின் பிடியிலிருந்து தென்னாபிரிக்கா விடுபடுவதற்கு அக்காலத்தில் முக்கியமான காரணமாக இருந்தவர் மண்டேலா என்ற பெரும் தலைவர். மண்டேலாவின் முயற்சிகள் வெற்றிபெற்று தென்னாபிரிக்கக் குடியரசு 'ஓர் உண்மைக்குடியரசாக' உருவாக்கப்பட்ட பின்னர், அதுவரைகாலமும் இருந்துவந்த மனக்கசப்புகளையும் ஆறாது என்று கருதப்பட்ட ரணங்களையும் ஆற்றுப்படுத்துவதையே தனது தலையாய கடமையாக மண்டேலா கொண்டிருந்தார். இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை கட்டமைக்கப்படாமலும் பகைமை மறக்கப்படாமலும் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் பயனற்றது. இதனால்தான் முதலில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குவது மண்டேலாவின் எண்ணமாக இருந்தது. இதற்காக, அடக்குமுறையாளர்களுக்கும், அடக்கப்பட்டவர்களுக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளில் மண்டேலா ஈடுபட்டார். அவற்றில் முக்கியமானதாக 'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்து - பழிவாங்கலைத் தவிர்த்து - உண்மையையும் நியாயத்தையும் பெறுவதற்கான ஒரு முறைமையை அதனூடாக ஏற்படுத்தினார். உலக வரலாற்றில், உண்மைகளை அறிந்து - மன்னித்து - இணக்கமாக வாழ்வதற்கான ஒருசிறந்த முன்மாதிரியாக இந்த முறைமை இன்றளவும் கருதப்படுகிறது. இலங்கை தற்போது ஆரம்பித்திருக்கின்ற 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' என்ற 'சொல்லாடலின்' பின்புலமும் இதுதான்.

ஆனால், தென்னாபிரிக்கா கைக்கொண்ட சொல்லாடல்களைப் பிரதிசெய்வதால் நல்லிணக்கம் இம்மியும் சாத்தியப்படாது என்ற யதார்த்தத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் குறிப்பாக ஜனாதிபதி ரணில் போன்றவர்கள் தெளிவுபெறுதல் அவசியம். அந்தத் தெளிவு 'மருந்திடலாக' இங்கு மாற்றம்பெற வேண்டும். வஞ்சிக்கப்பட்ட ஒருவனின் காயங்களுக்கு மருந்திட்டால்தான் அவன் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு(நல்லிணக்கத்துக்கு) தயாராகுவான். காயங்கள் ஆற்றுப்படாத பட்சத்தில் நல்லிணக்கம் என்பது சாத்தியமேயில்லை. ஆக, இறுதிப்போரின் போது தமிழர்கள் கண்ட காயங்களுக்கான ஆற்றுப்படுத்தலை - மருந்திடலை முதலில் கொழும்பு செயற்படுத்த வேண்டும். தமிழர்களின் மனக்காயங்கள் ஆறாமல் நீறுபூத்த நெருப்புப் போல் கனன்றுகொண்டிருக்கும் நிலையில், நல்லிணக்கத்தை நோக்கி எடுத்துவைக்கும் நகர்வுகள் எவ்வாறு சாத்தியமாகும்?

'உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை' அமைத்ததால் தென்னாபிரிக்கா இனத்துவேசங்களையும் நிறத்துவேசங்களையும் களையவில்லை. எல்லாவற்றுக்கும் முதல் அது பாதிக்கப்பட்டவர்களின் காயங்களை ஆற்றுப்படுத்தியது. இலங்கை செய்ய மறுக்கும் காரியமும் இதுவே.



# வங்கிச் சட்டங்கள்; விரைவில் திருத்தம்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 24**

**வங்கிச்சட்டங்களை வாடிக்கையாளர்களுக்குச் சார்பானதாக மாற்றியமைக்க வங்கிச் சொத்து சுவீகரிப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

"தற்போது வங்கிகளில் சொத்துகளை அடமானம் வைத்துக் கடன் பெற்று அந்தக் கடனை மீளச்செலுத்த முடியாதவர்களின் சொத்துகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற சொத்துகளை வங்கி அதிகாரிகள் தாமே கொள்வனவு செய்து வங்கிச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.

எனவே, வங்கிச்சட்டங்கள் வாடிக்கையாளர்களுக்குச் சார்பானதாக மாற்றியமைக்கப்படவேண்டும். இல்லாவிடின் புதிய சட்டம் இயற்றப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## வெளிநாடு செல்லும் எம்.பி.க்கள்

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் பலர் வருட இறுதியில் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அதனால் பல அரச நிறுவனங்களில் நடத்தப்படும் வைபவங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

இவர்கள், அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்றுள்ளதுடன் அந்த நாடுகளில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டைக் கொண்டாடவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (எ-இ)

## கொரோனாப் பயன்பாடு; வலைத்தளம் முடக்கம்!

கொரோனாத் தொற்றுநோய் பரவல் காலத்தில் அறிவுறுத்தல்கள் வழங்குதல்,நிதிசேகரிப்புஎன்பவற்றுக்காக பயன்படுத்தப்பட்ட itukama.lk என்ற இணையத்தளத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இணையப்பக்கத்தின் பெயரை வேறு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்துவதற்கான இயலுமை இருப்பதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## உணவுகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.24

எதிர்வரும் நாள்களில் உணவுப் பொருள்களின் விலைகள் 50 ரூபாவால் அதிகரிக்கப்படலாம்என்று தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## அரசியல்வாதிகளிடம் ஏமாறாதீர்கள்

தேர்தல்களில் அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாறாமல் நாட்டை முன்கொண்டு செல்லக்கூடியவர்களுக்கே வாக்களிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-6)

## நாளை

**25.12.2023**

**திங்கட்கிழமை**

**மார்கழி 09**

சுபநேரம் : 12.26 - 01.56

ராகுகாலம் : 07.56 - 09.26

கிறிஸ்மஸ் பண்டிகை

## நாளொரு நல்வார்த்தை

**உயர்வு என்பது ஒரு விதிவிலக்கான விடயமல்ல, அது நடைமுறை சார்ந்த அணுகுமுறையே.**

-கொலின் பவல்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 ஆவது வருட

## S.V.M எ

## அமரர் S.V



**S.V MURUGESU (PVT) LTD.**
**No.106, Hospital Road, Jaffna.**

**S.V.M. DISTRIBUTO**
**No.160, Stanley R**

சைவமும் தமிழும் வளர்த்த காரைநகர் பல கல்விமான்களோடு வர்த்த
வளர்த்தெடுத்த புனித பூமியாகும். இங்கு தோன்றிய பல தொழிலதிபர்கள்
செழிக்கச் செய்ததுடன் இலங்கையிலேயே பிரபல வர்தகர்களாக, தொழிலதிப
னர். இவர்களுள் 80 ஆண்டுகளாக வர்த்தகத்துறையில் ஜாம்பவானாக.
விளங்கிய பெருமை **S.V.M** என்ற மூன்றெழுத்துக்குரிய **S.V.**முருகேசு அவர்

புகழ் பெற்ற ஒவ்வருவருடைய வாழ்க்கையிலும் மூன்று நிலைகள் உள்ள
தொழில் துறை வாழ்க்கை,பொது வாழ்க்கை இம் மூன்றினையும் சிறப்பாக வா
அந்த வெகு சிலருள்ளும் மாணிக்கமாக வாழ்ந்தவர். **S.V.M** என்று அ
**S.V.**முருகேசு ஆவார்.

தனது 17 வயதில், 1940 இல் வர்த்தகத்துறையில் கால் பதித்த இவர், தனது
அரவணைப்புடன், வழிகாட்டலுடன் இத்துறையில் ஈடு படத்தொடங்கினார். 194
சொந்தமாக வர்த்தகத்தை அமைத்துக்கொண்டு **S.V.** முருகேசு" என்ற பெய
பெற்றுக்கொண்டார். அப்பொழுதிலிருந்தே **S.V.M** என்ற மூன்றெழுத்து வர்
சொல்லாக மாறத் தொடங்கியிருந்தது.

பின்னர் கிளிநொச்சி, கரடிபோக்குச் சந்தியில் 1950 இல் "முருகன்" அரிசி ஆலை"
ஆலைத் தொழிலை விஸ்தரிக்கும் முகமாக, கிளிநொச்சியில் பல நெல் வி
வாங்கி இரு போக நெற் செய்கையிலும் ஈடுபட்ட அதே எல்லையில் தென்னை
நாட்டம் கொண்டு செயற்பட்டார். பல்லாயிரக்கணக்கான நெல் மூடைகளை
களஞ்சியசாலைகளையும் அமைத்துக் கொண்டார்.

இவ்வாறு பல வழிகளிலும் முன்னேறிக் கொண்டிருந்த இவர், யாழ் நகரிலும் ஆ
ஆம் ஆண்டு **S.V**. முருகேசு என்ற பெயரில் நிறுவி மொத்த, சில்லறை வியாப
வந்தார். **S.V.M** என்ற பெயர் இக்காலகட்டம் முதல் வர்த்தக உலகில் ஒரு தனி
மிளிரத் தொடங்கியது. 1974இல் முள்ளியவளையிலும் முருகன் அரிசி ஆலை
ஆம் அன்று தொடக்கம் தனது இறுதிவரை உலகின் பெயர் பெற்ற பல்
விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டார்.

இவர் 1980ம் ஆண்டு மூன்று தொழிலில் அதிபர்களுடன் சேர்ந்து யா
உருவாக்கினார். அப்பொழுது 75 அங்கத்தவர்கள் இருந்தனர். அக்கால கட்டத்
முதலாவது தலைவராக **S.V**.முருகேசு அவர்கள் கடமையாற்றினார்.

1986 இல் கொழும்பிலும் தனது வர்த்தகத்தை விஸ்தரித்து **S.V.M** என்ற
வாணிப நிலையத்தை அமைத்து வெற்றிகரமாக நடத்திவந்தார். இவரின்
கண்டு New Zealand Milk Board இன் இலங்கை நிறுவனம் தமது
விநியோகஸ்தராக இவரை நியமித்து. அந்த வகையில் 1992 இல் அங்கர் பா
கொழும்பு, புறக்கோட்டை மற்றும் யாழ் குடாநாடு முழுவதிக்குமான விற்ப
விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட ஜனன தினம்

## ன்ற மூன்றெழுத்து

# .V.முருகேசு அவர்கள்

## ஸ்தாபகர்

**UTORS (PVT) LTD.**
**ey Road. Jaffna.**

**S.V.M. RICE MILL**
**Power House Road**
**Chunnakam.**

**S.V.M. FUEL MART**
**173, 175. Palay Road,**
**Thirunelvely.**

**S.V.M. ENTERPRISE (PVT) Ltd**
**289, A9 Road Karadipokku,**
**Kilinochchi.**

வர்த்தகப் பெருமக்களையும்
ர்கள் தமது வர்த்தகத்தைச்
லதிபர்களாக விளங்கியுள்ள
ளாக. முடிசூடா மன்னனாக
அவர்களையே சாரும்.

ள்ளன குடும்ப வாழ்க்கை.
க வாழ்பவர்கள் வெகுசிலரே.
று அழைக்கப்படும் அமரர்.

னது தாயாரின் ஆதரவுடன்.
. 1941 இல் தனது 18 வயதில்
பெயரை மக்கள் மத்தியில்
வர்த்தக உலகில் மந்திரச்

லை" யை நிறுவினார். அரிசி
விளையும் நிலங்களையும்
னைப் பயிர்ச் செய்கையிலும்
களைக் களஞ்சியப்படுத்தும்

ும் ஆஸ்பத்திரி வீதியில் 1960
வியாபாரத்தை மேற்கொண்டு
தனித்துவம் பெற்ற பெயராக
லையை நிறுவினார். 1983
பல் தேசியக் கம்பனிகளின்

யாழ் வர்த்தக சங்கத்தை
ட்டத்தில் யாழ் வர்த்தக சங்க

ன்ற பெயருடன் பல் பொருள்
ின் வளர்ச்சியும் திறமையும்
மது பாற்பொருள் விற்பனை
கர் பால்மா வகைகளுக்கான
விற்பனை விநியோகஸ்தராக

இவரது உயர்வின் சிகரமாக 2003 இல் வெள்ளவத்தையில் Esviems என்ற நாமத்துடன் சூப்பர் மார்கட் ஒன்றைத் திறந்து 04 வருடங்கள் அதை திறம்பட நடத்தி வந்தார். பின் அதனை இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனமான ARP ICO விற்கு கையளித்தார்.

இவ்வாறு தான் கால்பதித்த பல வர்த்தகத் துறைகளிலும் முன்னேறிய **S.V.**முருகேசு அவர்கள் சமய. சமூக சேவைகள் பலவற்றையும் தனது சொந்த ஊரிலும் வெளியூர்களில் போற்றத்தக்க வகையில் செய்து வந்தார். தன்னிடம் பணியாற்றியவர்கள் நல்ல நிலைக்கு வரும்படி உதவிய பெருந்தகையாளர். இவர்.

இவ்வாறாக 80 வருடகாலமாக வர்த்தகத் துறையில் **S.V.M** என்ற மூன்றெழுத்தின் கொடி உச்சமாக. உயரமாக பறக்க காரணகர்தராக இருந்த இவர் வியாபார உலகில் பல வெற்றிகளையும் சிறந்த விநியோகஸ்தருக்கான பரிசில்களை பெற்றுக்கொண்டார். தற்போது அவரது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் **S.V.M** நிறுவனங்களை சிறப்புற நடத்தி வருகின்றனர்.

அவரது வர்த்தக துறையின் சாதனைக்காக **Federation of chambers of Commerce Industries of Sri Lanka(FCCISL)**ஆல் 2008 ஆம் ஆண்டு கெள ரவிக்கப்பட்டார் என்பதுகுறிப் பிடத்தக்கது.

தனது வாழ்வின் எல்லா நிலைகளையும் சிறப்புற வாழ்ந்த **S.V.**முருகேசு அவர்கள் 87 வயதில் இறைவன் திருவடிகளில் இணைந்து கொண்டார். ஆனால் **S.V.M** என்ற அந்த மூன்றெழுத்து என்றும் நிலைத்திருக்கும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**இன்று. S.V. முருகேசு நிறுவனம் தனது 80 ஆவது ஆண்டு**
**அமுத விழாவில் கால் பதிப்பதில் பெருமையடைகின்றது.**

## S.V. முருகேசு

**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 8899**

**S.V MURUGESU**
**IMPORTERS, GENERAL MERCHANTS &**
**CONSIGNMENT AGENT**
**NO.154, HOSPITAL ROAD, JAFFNA.**
**TEL: 021- 4925831/021- 2228899**
**FAX: 021-2228899**
**svmmurugasugunaratnam@yahoo.com**

**S.V.M. (PVT) LTD.**
**NO.122, DAM STREET, COLOMBO - 12.**

**FONTERRA AGENT COLOMBO**
**NO.142, DAM STREET, COLOMBO - 12.**
**TEL: 011 437 8678**
**svm-sugar@hotmail.com**

**வாழ்த்துவோர்: உரிமையாளரும், ஊழியர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்கத்துடனான பேச்சில் மூன்றாம் தரப்பு கண்காணிப்பு

## அவசியம் என்கிறார் சிறீதரன் எம்.பி.

**கிளிநொச்சி, டிசெ. 24**

**மூன்றாம் தரப்பின் கண்காணிப்பு இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேசச் செல்வதில் அர்த்தமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது. தமிழ்த் தரப்புகளுடன் பேச்சு எல்லோரையும் ஏமாற்றுவதற்கான ரணிலின் தந்திரோபாயம். தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதி ரணில் உட்பட எந்தவொரு சிங்களத் தரப்புகளும் இதயசுத்தியுடன் முன்வரவில்லை.

இந்தியா, அமெரிக்கா ஆகியன இறுதிப் போரில் இலங்கை அரசாங்கத்தின் பங்காளிகள். எமது மக்களை அழித்ததில் அவர்களுக்கு மிகப்பெரிய பங்குண்டு. அவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழர் தரப்புக்கும் இடையிலான பேச்சில் கண்காணிப்பாளர்களாக பங்கேற்கவேண்டும். அவ்வாறில்லாத பேச்சை அரசாங்கத்துடன் நாங்கள் நடத்துவது அர்த்தமற்றது- என்றார்.

இதேவேளை யாழ்ப்பாண விவசாயிகளை முடக்கும் நோக்கத்துடன் பழுதடைந்த உருளைக் கிழங்குகள் எடுத்து வரப்பட்டுள்ளனவா என்பது ஆராயப்படவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வலியுறுத்தினார். (ஒ-113)

# பூநகரி மக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்போம்

யாழ்ப்பாணம், டிசெ. 24

பூநகரியில் முன்னெடுக்கப்படவுள்ள மாற்றுச் சக்தி மின் உற்பத்தி அதானி குழுமத்தால் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் பூநகரி மக்களின் கருத்தை முதலில் கேட்டறியவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க்கட்சிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார் என இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

'பூநகரியில் மாற்றுச் சக்தித் திட்டத்தில் அந்த மக்களுடைய வேண்டுகோளும் கரிசனைகளும் கருத்திலெடுக்கப்படும். ஏதாவது பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் ஆராய்ந்த பின்னரே திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதானி நிறுவனம் தற்சமயம் இதனை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

தொழில்ரீதியான, தொழில்நுட்பரீதியான பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக மக்களுடன் தொடர்புகொண்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் உத்தரவிட்டார்" என்று சுரேன் ராகவன் குறிப்பிட்டார். (ஒ-125)

# மரக்குற்றிகளை வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினரால் சட்டவிரோதமான முறையில் வீரை மரக்குற்றிகளை உடைமையில் வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளே கைப்பற்றப்பட்டன. (ரி-125)

# பருத்தித்துறையில் கைதான மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறையுடன் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 24

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையால் கடந்த 10ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த 13 தமிழக மீனவர்களும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்ட நிலையில் பிறிதொரு வழக்கு விசாரணை தொடர்பில் 28ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2 படகுகளுடன் நாகபட்டினத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒரு படகில் பயணித்த படகு உரிமையாளர் உள்ளிட்ட 13 மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளால் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்பாக நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டது.

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தை மீனவர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து, 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை என்னும் நிபந்தனையுடன் விடுதலை செய்தும் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (ஒ-100,66)



# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வூட்டல்

யாழ்ப்பாணம், டிசெ. 24

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்குபடுத்தலில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மாணவர் தலைவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலையில் மாணவர்களுக்கு எவ்வாறு ஆரோக்கியமான சமூகச் சூழலை ஏற்படுத்துதல் மற்றும் மாணவர்களின் ஒழுக்கநெறிகள் தொடர்பாக இதன்போது வலியுறுத்தப்பட்டது. (ச-20)



# சவுக்கு வியாபாரம் யாழில் சூடுபிடிப்பு

யாழ்., டிசெ. 24

கிறிஸ்மஸ் பண்டிகை களைகட்டியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்மஸ் மரக்கிளைகளுக்கான சவுக்குக் கிளைகளின் வியாபாரம் சூடுபிடித்துள்ளது. நாகர்கோவில், மணற்காடு ஆகிய பகுதிகளிலிருந்து அவை கொண்டுவரப்பட்டு யாழ்.நகரில் விற்பனை செய்யப்படுகின்றன. சவுக்கு மரக்கிளை ஒன்று ரூபா 600 ரூபாவிலிருந்து 900 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-20-17)



சைவபரிபாலனசபை முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த கலைவிழா சைவபரிபாலன சபைத் தலைவர் தயானந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்களுடைய கலைநிகழ்வாக பேச்சு, நாடகம், நடனம் என்பன சிறப்புற்றன. (ச-125)

# கொடுப்பனவுகள் தாமதம்

சாவகச்சேரி, டிசெ. 24

தென்மராட்சிப் பிரதேச 'அஸ்வெசும' நலன்புரித் திட்டப் பயனாளிகள் சிலருக்கு டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் வங்கிக் கணக்குகளுக்கு வந்துள்ளது. பலரது கணக்குகளுக்கு கொடுப்பனவு வரவில்லை என்று பயனாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடுவதில் தாமதமாக இருக்கலாமெனவும் அடுத்த வார இறுதிக்குள் கணக்குகளில் வைப்பிலிடப்படுமெனவும் தெரிவித்தனர். (ரி -9)

# கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, டிசெ. 24

தென்மராட்சிப் பிரதேச முதியோர்களுக்கான நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த கொடுப்பனவுகளை எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக் கணக்குகள் முடிவுறுத்தவுள்ளதால் தமது கொடுப்பனவுகளை அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு திருநெல்வேலி யில் அமைந்துள்ள நிலைய மண்டபத்தில் நேற்றும், இன்றும் காலை 8.30 மணி முதல் பி.ப. 1 மணி வரை இடம்பெறவுள்ளன. (ரி-66)


### மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குலம் (V)1988, திருவோணம், IT Professional, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. 14 3/ 1G, 37 th Lane Colombo - 06,

077 711 1786, 074 234 8099

Realmatrimony.com

### விற்பனைக்கு

ஒரு பெரிய நாய்க்கூடு ஒன்றும் கடைப்பாவனைக் குரிய குளிர்சாதனப் பெட்டியொன்றும், அலுமினிய Showcase ஒன்றும் விற்பனைக்குண்டு.

மு.கமலநாதன்

No. 17, விதானையார் வீதி,

சுண்டுக்குளி.

### விற்பனைக்கு

இரண்டு Mountain Bike, சிறுவர் சைக்கிள் பெரிய வாபிகியூ (B.B.Q) மெசின் புல் வெட்டும் மெசின் என்பன விற்பனைக்குண்டு.

071 814 8150

### தமிழ், ஆங்கில கணினி தட்டெழுத்தாளர் தேவை

கோண்டாவில் பிரதேசத்தில் இயங்கும் சட்டத்தரணி அலுவலகத்துக்கு தமிழ், ஆங்கில கணினி தட்டெழுத்தார் தேவை.

தொடர்புகளுக்கு:

077 790 5438, 021 205 3982

### விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட் செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊரவேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

### மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குலம் (V) 1993, திருவோணம், Quantity Surveyor, UK சூரியன் செவ்வாய், மணமகனுக்கு மணமகள் தேவை. 14 3/ 1G, 37 th Lane Colombo - 06,

074 234 8099, 077 711 1786

Realmatrimony.com

### மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குலம் (V) 1989, உத்தராடம், Veterinary Surgeon, Canada மணமகனுக்கு மணமகள் தேவை. 14 3/ 1G, 37 th Lane Colombo - 06.

074 234 8099, 077 711 1786

Realmatrimony.com

### வாடகைக்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் வியாபார தளம் வாடகைக்குத் தேவை.

077 281 1234

### குருக்கள், உதவி குருக்கள் தேவை

கொழுப்பு 13 ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு **குருக்கள், உதவிகுருக்கள்** தேவை. தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்ப்படும்.

விண்ணப்பிக்கவேண்டி முகவரி:

98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு -13

Phone: 0722 223 340 / 0722 447 606 / 0777 261777

Email: muruganginthupitiy@gmail.com

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V) 1986 சித்திரை கிரகபாவம், 14 1/4, செவ்வாய் 2இல், 2ம் பாதம். சுயதொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 547 0631

### பிரத்தியேக வகுப்புகள்

A/L இணைந்த கணிதம் 2024, 2025 மாணவர்களுக்காக தனியாக or குழுவாக கற்பிக்கப்படும்.

077 832 4002

### வீடு வாடகைக்கு தேவை

4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை. (கச்சேரியடி, சுண்டுக்குளி, கோவில் வீதி, நாவலர் வீதி) விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 649 0650

### மணமகள் தேவை

யாழ் இந்து (V), 1977, உத்தரட்டாதி சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

நேரடித்தொடர்பு: 076 860 5172

### தேவை

பில் கிளாக், பொதியிடல், மாவறுத்தல், உதவியாளர் என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.

பிருந்தா மில், 184, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Tel:077 174 6101

### வீடு வாடகைக்கு

இரண்டு அறைகளைக் கொண்ட மாடி வீட்டின் மேல் பகுதி வாடைகைக்கு உண்டு. தனி நபர் அல்லது இருவர் மட்டும் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது.

077 253 0865


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### ஐயாத்துரை வரதராஜா



(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி : பூரவபக்கத்திரியோதசி

பிரமனிடம் 15.07.1942 — பரமனிடம் 27.12.2021

எண்ணமதில் எழில் சேர்க்கும் தந்தையே
எம்மை இவ் உலகில் ஏற்றி வைக்க
எதையும் தாங்கினீர் ஏழ்மை என்றால்
என்னவென்று தெரியாது காத்தீர்
நாம் நினைக்கவில்லை எம்மை விட்டு
இவ்விரைவில் நீத்திடுவீர் என
மூன்றாண்டுகள் என்ன முப்பது ஆண்டுகள்
சென்றாலும் உமை மறவோம் நாம்

குடும்பத்தினர்

கண்டி வீதி, எழுதுமட்டுவாழ்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 11 . 1923



இறப்பு 18 . 12 . 2023

### அப்பாக்குட்டி நாகம்மா

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி நாகம்மா கடந்த (18.12.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பாக்குட்டியின் அன்பு மனைவியும், புஸ்பரத்தினம், சண்முகலிங்கம் தங்கரத்தினம், காலஞ்சென்ற அன்னலிங்கம், மனோன்மணி, விசாலாட்சி, சிவபாக்கியலக்சுமி, வரதலீலா, பாஸ்கரன், பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மகேஸ்வரி, அருளானந்தம் மற்றும் பவளகேசன், மரியசோதி, லிங்கேஸ்வரன், கமலநாதன், கார்த்தியாயினி, உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாந்தினி, செந்தில்குமரன், நந்தகுமார், சதீஸ்குமார், காலஞ்சென்ற சுதர்சினி, சுரேஸ்குமார், அமிர்தராஜ் மற்றும் சியாமினி, தாரணி, அகிலா, அருள்குமரன், வசிகரன், அரவிந்தன், அஜந்தன், வித்தியகலா, ஆரணி, ஆர்த்தி, ஆர்த்திகா, நிதர்சன், கோகுலன், கோபிகா, கபிஷன், ஆதவன், அஞ்சலி ஆகியோரின் பாசமிகு பாட்டியும், யாதவன், யதுஷன், துஷான், கஸ்வின், விஷ்ணவி, நவிஷ்ணன், பவிஷ்ணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை கனடிய நேரப்படி 11.00 மணியளவில் Aeterna Funeral Complex, 55 Gince Street, Monreal H4N 1J7 என்னும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

(cs53262) N-1

தகவல்:
**மகள் - புஸ்பரத்தினம்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 07 . 1970



மறைவு 21 . 12 . 2023

### தங்கவேலு செட்டியார் கனகரத்தினம் (கனகு)

(முன்னாள் சாந்தி கபே உரிமையாளர்)

பதுளையை பிறப்பிடமாகவும், கில்னர் லேன், கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலு கனகரத்தினம் அவர்கள் கடந்த (21.12.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தங்கவேலு காலஞ்சென்ற நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற சண்முகவேல் மற்றும் அமராவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இந்திராகாந்தியின் அன்புக் கணவரும், ரிசாந், சூரியா, கன்னிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 9148 784
077 9400 685

(CS 27452) A-1

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



**வாக்கியப் பஞ்சாங்கப்படி சனிபகவான் டிசெம்பர் 20 ஆம் திகதி மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். 20.12.2023 முதல் 6.3.2026 வரை கும்பராசியில் சஞ்சரிக்கவுள்ளார்.**




தலைமைப் பண்பு கொண்டு அனைவரிடமும் அன்போடு நடந்து, தவறாக நடக்கும்போது கடிந்துகொள்ளவும் தவறாரத கம்பீர மனம் படைத்த சிம்ம ராசி அன்பர்களே...

இதுவரை சனிபகவான் உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டில் அமர்ந்து பலன் தந்தார். பல வகைகளிலும் அனுகூலமான பலன் கிடைத்தது. அடிப்படை வசதிகள் உயர்ந்தன. பட்டம் பதவி தேடிவந்தது. பணப்புழக்கமும் எதிர்பார்த்த அளவுக்கு தாராளமாக இருந்தது. விரோதிகள் ஓடி ஒழிந்தார்கள். அப்படி அனுகூலமாக இருந்த சிம்ம ராசிக்காரர்களுக்கு தற்போது சனிபகவான் 7 ம் வீட்டுக்கு வருவது நல்ல பலன்களைத் தராது. 20.12.23 முதல் 6.3.26 காலக்கட்டங்களில் கண்டக சனியாக சனி பகவான் சஞ்சாரம் காலகட்டத்தில் சிறிது எச்சரிக்கை அவசியம். தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்துவிடுவது நல்லது. குடும்பத்தில் தேவையில்லாத குழப்பங்கள் ஏற்படும். சின்னச் சின்ன விஷயங்களுக்கும் சண்டை போடுவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உங்கள் பக்க நியாயத்தைப் புரிந்துகொள்ளாமலேயே பேசுவார்கள். நிலைமையைப் புரிந்துகொண்டு அமைதியாக இருந்து காரியம் சாதிக்க வேண்டியது அவசியம்.

ஆரோக்கியத்தில் உரிய கவனம் தேவை. இரவு நேரப் பயணங்களை முற்றிலும் தவிர்த்துவிடுவது நல்லது.

சனிபகவானின் பார்வைப் பலன்கள்

சனிபகவானின் பார்வை உங்கள் ராசியின் மீதே விழுவதால் தேவையற்ற விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். சரும வியாதிகள் ஏற்பட வாய்ப்புண்டு. நாகரிக உடைகளுக்காகச் செலவு செய்யும் விருப்பம் ஏற்படும். உணவு விஷயங்களில் எச்சரிக்கை தேவை. வெளி உணவுகளைத் தவிர்ப்பதும், உணவைத் தவிர்ப்பதும் இரவு வேளைகளில் உண்பதும் முற்றிலும் தவிர்த்துவிடுவது நல்லது.

சனிபகவான் உங்கள் ராசிக்கு நான்காம் வீடான விருச்சிகத்தைப் பார்ப்பதால் செலவுகள் அதிகரிக்கும். வாகனப் பராமரிப்புச் செலவுகள் கூடும். வீட்டிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிவரும். குடும்பத்தில் மூத்த உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சனிபகவான் உங்கள் ராசிக்கு லாப வீடான மேஷத்தைப் பார்ப்பதால் செலவுகள் அதிகரிக்கும். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும்.

**வியாபாரம்:** வியாபாரத்தில் மாற்றங்களைச் செய்யும் முன்பாக நன்கு ஆலோசித்துச் செயற்படுவது நல்லது. அதிகமாகக் கடன் வாங்கி முதலீடு செய்வதை முற்றிலும் தவிருங்கள்.

**உத்தியோகம்:** பணியிடத்தில் கெடுபிடி அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் இணக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். வரவேண்டிய சலுகைகள் தாமதமாகத் தான் கிடைக்கும் பதவி உயர்வு கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்த சனிப்பெயர்ச்சி சில நேரங்களில் உங்களை சுதந்திரமாகச் செயற்பட விடாமல் கட்டுப்படுத்தினாலும் சமயோஜித புத்தியால் வெற்றிபெற சந்தர்ப்பங்களையும் உருவாக்கும்.**

## 200 ஆவது ஆண்டு நிறைவும் பரிசில் நிகழ்வும்

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம், வட்டு.பிளவத்தை அ.மி. த.க. பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மா.முருகதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், வலிகாமம் வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும்பொறுமையைக்கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடவேண்டாம். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர் பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது சற்று கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக தேவை. வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம். செலவுகள் ஏற்படும். தாயின் தேவையை நிறைவேற்ற சற்று அலைச்சல் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். கணவன் பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணை யால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும்.

## கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.24

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 39ஆவது கலை விழாவும், பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 13ஆவது கலைவிழாவும் கொக்குவில் பொற்பதி அறிவாலய கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பொற்பதி அறிவாலயம், சரஸ்வதி முன்பள்ளி தலைவர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சமுதாய மருத்துவ பதிவாளரும், மருத்துவ கலாநிதியுமான நா.பரமேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ரி)



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் வளர்ச்சிக்கு கணேஸ்வரம் அளவெட்டியைச் சேர்ந்த வைரமுத்து பரராஜசிங்கம் குடும்பத்தால் சுமார் ஒரு லட்சம் ரூபா நன்கொடையாக மருத்துவமனை நிர்வாகத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காரைநகர் அபிவிருத்திச் சபை
## புதிய யாப்பினை அங்கீகரிப்பதற்கான
## விஷேட பொதுக் கூட்டம்

**தலைமை :** திரு. விஸ்வலிங்கம் ஹம்சன் (காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர்.
**இடம் :** காரைநகர் பிரதேச கலாசார மண்டபம், வலந்தலைச் சந்தி, காரைநகர்.
**காலம் :** 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை
**நேரம் :** காலை 9.30 மணி

**குறிப்பு:**
31.12.2023 ஆம் திகதி வரை இணைந்து கொண்ட ஆயுள்கால அங்கத்தவர்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு வருட சந்தா செலுத்திய அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**காரைநகர் அபிவிருத்தி சபை,**
**சின்னாலடி, காரைநகர்.**
**தொலைபேசி** - 021 221 1757
24.12.2023

**திரு.பொன்னம்பலம் பரந்தாமன்**
**செயலாளர்.**

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25832) (N.I)

**077 755 1193**



உ
ஓம் சிவமுருகா
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**பருத்தித்துறை, மருதடி, குருமணல்**
## அருள்மிகு கந்தசுவாமி கோவில்
பரிபாலன சபை
**PARUTHTHITHURAI, MARUTHADY, KURUMANAL**
**ARULMIHU KANTHASWAMY KOVIL**
**PARIPALANA SABAI**
Reg. No. HA/5/JA/891

## கூறு விலை கோரல்

மேற்படி ஆலயத்திற்கு முருகப் பெருமானின் திருவருளால் இராசகோபுரம் அமைப்பதற்கு உத்தே சித்துள்ளோம். அதனால் ஏற்கனவே கால் புறாய் வரையும் அமைக்கப்பட்டுள்ள தளத்தின்மேல் ஐந்து தள இராசகோபுரம் அமைப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. சிறந்த சிற்பாசாரியார்கள் தங்கள் கூறு விலையையும், தாங்கள் முன்செய்த வேலை விபரங்களையும் ஏழு நாட்களுக்குள் அறியத் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்

**த.ஜெயவர்த்தனராசா**
தலைவர்,
**077 819 2336**

**சி.குருபரன்**
செயலாளர்,
**077 597 0999**

**ந.தேவராசா**
பொருளாளர்,
**077 291 5759**

மின் அஞ்சல்
kurukobi@gmail.com

**தொடர்புகொள்ளும் விலாசம்:**
**ந.தேவராசா**
**விஸ்வருவ வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.**

## பெருமை கொள்கின்றோம்

**ராஜா பிளாசா உரிமையாளரும் பிரபல சமூக சேவையாளரும் எமது நண்பருமாகிய செங்கைப்புரவோன்**
**உயர்திரு.இராசையா குவேந்திரநாதன்**
அவர்கள் சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து



கொள்ள அழைக்கப்பட்டு இந்தியா சென்ற வேளை சென்னை மெரீனாக் கடற்கரையில் அமைந்துள்ள **புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் (M.G.R)** நினைவிடத்தில் மலர்மாலை அணிவித்து மலர்தூவி மலரஞ்சலி செலுத்திய நிகழ்வால் நாமும் பெருமை கொள்கின்றோம் - 14.10.2023

**உரிமையாளரும், ஊழியர்களும்,**
**பெஷன் ஹவுஸ்**
**203, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
(cr.41369) (N.I)

## முழு நேர வேலைவாய்ப்பு

**AJ Cellmar Ventures (Pvt) Ltd**
**நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில்**

பின்வரும் முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- **விற்பனை முகாமையாளர்**
  இரண்டு வருட வேலை அனுபவம்
- **டெலி மார்க்கெட்டிங் விற்பனை பிரதிநிதி**
  உயர்தரச் சித்தி புதியவர்கள் விரும்பத்தக்கது

(cs.53239) (N.I)

**No. 39 Canal Row,**
**NDB Bank Second Floor Colombo-1**
**077 116 9745, 075 825 6548**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக'

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1935



மறைவு 23 . 12 . 2023

### நாகலிங்கம் ஆனந்தராசா

**(ஓய்வுநிலை பிரதம லிகிதர், தேசிய வீடமைப்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்.)**

யாழ். சந்தை வீதி, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஆனந்தராசா அவர்கள் நேற்று (23.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், பரராஜசிங்கம், நவரத்தினம், ஞானசேகரம், சிவயோகம், புஸ்பராசம், இராசலட்சுமி, கௌசலாதேவி, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ரதிதேவி, செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்புக் கணவரும், நாகநந்தினி, விக்னராசா (லண்டன்), விமலராசா (அதிபர், யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்), பிறேமினி, வித்தியா (ஆசிரியர், யா/வல்வை அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரலிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர், யா/ தொழில்நுட்பக் கல்லூரி), சுதாயினி (லண்டன்), ரதினி, சிவகுமாரன், பகீரதன் (பிரதி அதிபர், யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்சனா-வாகீசன், விமேஷ்-கிர்திகா, ரவீஸ்-அனோயா, சகானா-சாய் விக்னேஸ், சங்கீத், வினேஷ், ஜயகுலன், ஜயனுகா, சாருஜா, கிருசாந்தன், வேணுஜா, திவ்யா, மோனிஷா, சுவஸ்திகன், பிரியங்கா, கீர்த்தி, கார்த்திகன், ஆர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மேனுஜன், யானுகன், வினுர்ஜிகன், அபீஸ், அஸ்மிதா, ஷாஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**சந்தை வீதி, உடுப்பிட்டி.** (CS 27458) A-1 **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1947



மறைவு 21 . 12 . 2023

### உமாபதி திருக்குமார்

கணுக்கேணி மேற்குமுள்ளியவளை முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உமாபதி திருக்குமார் அவர்கள் கடந்த (21.12.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உமாபதி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அழகம்மாவின் அன்புக் கணவரும், பிறேமலதா (ஆசிரியை கலைமகள் வித்தியாலயம்), கேமலதா (லண்டன்), ஸ்ரீலதா (அதிபர், முறிப்பு தமிழ் வித்தியாலயம்), பிரதீபா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமலதாஸ், ரபேந்திரன் (லண்டன்), சுதாகரன், ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சதீஸ்கரன் வித்ஜா (லண்டன்), திசாந்தன் கேதுர்ஷா, மீனுஜா (லண்டன்), சானுஜா (லண்டன்) ரித்துஜா (வித்தி.க. மாணவி) கிதுசாந் (வித்தி. க.மாணவன்) பிரீத்தி (லண்டன்) ஜஸ்வின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஷாம்சன் (லண்டன்) துருவ் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை கணுக்கேணி மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பி.ப 12.00 மணிக்கு கற்பூரப்புல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
(CS 27459) A-1 **குடும்பத்தினர்**

## இணையம்மூலம்...

உழைக்கலாம் என்று சமூக வலைத்தளங்களில் வெளியான விளம்பரங்களை நம்பியே இவர்கள் பணத்தை இழந்துள்ளனர். யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் இந்த விளம்பரத்தை நம்பி 30 இலட்சம் ரூபா, 16 இலட்சம் ரூபா என அவர்கள் இழந்துள்ளனர்.

விளம்பரம் மூலம் தொடர்பு கொள்வோர், சிறு தொகையை முதலீடு செய்யக் கூறுவார்கள். அந்தத் தொகையை அனுப்பியதும் ஒரு சிறிய வேலை (டாஸ்க்) ஒன்று கொடுக்கப்படும். அதைச் செய்ததும் அவர்கள் வைப்பிலிட்ட பணத்தை விடவும் அதிக பணம் மீண்டும் வழங்கப்படும்.

இது சிறிதுகாலம் தொடர, இதன்மூலம் பணம் ஈட்டலாம் என்ற நம்பிக்கை ஏற்படும் போது, மெல்ல மெல்ல பெரிய தொகைகளை முதலீடு செய்யக் கூறுவார்கள்.

பணத்தை மீளப் பெறலாம் என்ற நம்பிக்கையில் இங்குள்ளவர்கள் இலட்சக்கணக்கில் பணத்தை முதலீடு செய்யும்போது, பணத்தைச் சுருட்டிக்கொண்டு அவர்கள் காணாமல் போகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு பலர் தங்கள் பணத்தை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்ததாவது:-

இவ்வாறான மோசடிகள் தற்போது அதிகம் நடக்கின்றன. மோசடியாளர்கள் சமூக வலைத்தளங்கள் மூலமே மக்களைக் குறிவைக்கின்றனர். **இந்த மோசடிகளில் சிக்கிப்பலர் பணத்தை இழந்துள்ளனர். இவ்வாறான விளம்பரங்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் - என்றார்.**

(அ-எ-26)

## நாகபூஷணி திருமண சேவை

**அனைவருக்கும் இலவசம்**

**25.12.2023 முதல் 30.12.2023 வரை**

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவுசெய்து தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**077 138 7596, 071 999 9306**

(CS 27449) A-1

## யாழ்ப்பாணத்தில் காட்சியறை இடவசதி தேவை

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முன்னணி Tile (டைல்) உற்பத்தியாளர்கள் / விநியோகத்தர்கள் யாழ்ப்பாணம் நகரத்துக்கு அண்மையில் **காட்சியறை** ஒன்றைத் திறப்பதற்கு விரும்பியுள்ளனர். பொருத்தமான அமைவிட உரிமையாளர்கள் மற்றும் முகவர்களாக இணைந்து கொள்வதற்கு விரும்புகின்றவர்கள் அவர்களின் விபரங்களை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு **ஆங்கிலத்தில்** அனுப்பி வைக்கவும்.

**stargranite.moffice@gmail.com**

## மணமகள் தேவை

1980 யாழ். இந்து (v), UK Nationalty உடைய திருமணமாகாத நற்பண்புள்ள மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. **மணமகன் விபரம்:** உதய லக்கினம் கடகம், சந்திர லக்கினம் மீனம் உத்திரட்டாதி 2ஆம் கால் இலங்கையில் பட்டதாரி மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. வாட்சாப் இலக்கத்திற்கு புகைப்படம், குறிப்பு, நேரடி தொடர்பு இலக்கத்தை அனுப்பவும்.

தொடர்பு வாட்சாப் **044 780 251 6808 (Krish - UK)**

## வீடு வாடகைக்கு

மருதடி லேன் நல்லூரில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான இரு மாடிகளையும் அனைத்து தளபாட வசதிகளையும் கொண்ட வீடு.

நீண்ட காலத்திற்கு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம்.

**வ.சுகுமார்** தொடர்பு : **076 881 2077**
**021 221 6099**

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 10 . 1955



இறப்பு 22 . 12 . 2023

### மருசலின் யோண்மேரி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருசலின் யோண்மேரி நேற்றுமுன்தினம் (22.12.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருசலின் லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும், கெலன் அருள்மேரி (சுசீலா) யின் அன்புக் கணவரும், ஜஸ்மினி, நிரோஜினி ஆகியோரின் தந்தையும், அன்ரனி யேசுதாஸ், கபிலன் ஆகியோரின் மாமனும், ஜனுஸ், ஜீவிஸ் ஜெறிஸ், பிரகன்யா, அவனியா ஆகியோரின் பேரனும், அன்னமேரி, பீற்றர், இந்திரா, சந்திரா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாடுகள் இன்று (24.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்று, காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மானிப்பாய் (cs.53267) (N.1) மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீர் உடல்நலக்குறைவு இளைஞர் உயிரிழப்பு!



திடீர் உடல் நலக்குறைவு காரணமாகப் பாதிக்கப்பட்ட இளைஞர் நேற்று சனிக்கிழமை மதியம் உயிரிழந்துள்ளார்.

தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மதனகுமார் (வயது -39) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் இலங்கை வங்கிக் கிளையில் நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் அவர் நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் கொடிகாமத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்படவே, அவர் முச்சக்கர வண்டியில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேலேயே உயிரிழந்துவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இறப்பு விசாரணைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (ஓ-9-100)

## தூசு தட்டிய முதியவர் கீழே விழுந்து சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

வீட்டின் உள்ளே ஏறி நின்று தூசு தட்டிய முதியவர் தவறி கீழே விழுந்ததால் உயிரிழந்துள்ளார்.

அராலி வடக்கைச் சேர்ந்த வடிவேலு பரமகுலதேவராசா (வயது-75) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தூசி தட்டும்போது கீழே விழுந்துள்ளார். உறவினர்கள் உடனடியாக அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டாரென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-27)

## 6 மாதக் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

மூச்சு விட சிரமப்பட்ட 6 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த பிருந்தாபரன் அக்சரா என்ற 6 மாதக் குழந்தையே இவ்வாறு நேற்று அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் மூச்சுவிடச் சிரமப்பட்ட நிலையில் குழந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## சிறுநீரகத்தில் கிருமித் தொற்று குடும்பப் பெண் உயிரிழப்பு

பருத்தித்துறை, டிசெ. 24

சிறுநீரகத்தில் ஏற்பட்ட கிருமித் தொற்று உடலில் பரவியதன் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புனிதநகர், கற்கோவளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான பத்மாவதி ரவிச்சந்திரன் (வயது -50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நெஞ்செரிவு, வயிற்றுநோ ஏற்பட்டதை அடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்நிலையில், நேற்று சனிக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். சிறுநீரகம் பாதிப்புக்கு உள்ளகியதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையை சட்ட மருத்துவ நிபுணர் வாசுதேவா மேற்கொண்டார். (அ-ஒ-100)

### கொரோனா...

தேசிய ரீதியில் கொரோனாத் தாக்கம் தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் நிலைமைகள் தொடர்பில் அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொடர்பில் எந்தவொரு சம்பவமும் இதுவரை பதிவாகவில்லை. கொரோனாத் தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஆனால், டெங்கு தீவிரமாக பரவி வருகின்றது. தினமும் 100க்கும் குறையாதவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே டெங்கு தொடர்பிலேயே வடக்கு மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும். டெங்குத் தொற்றாளர்களின் அதிகரிப்பின் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் டெங்கு தொற்றாளர்களுக்கு இரண்டு விடுதிகள் புதிதாக நேற்று திறக்கப்பட்டுள்ளன'- என்றார்.

(அ-ஒ-5-26-100-66-125)

### கந்தரோடை...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இற்றைக்கு 2 ஆயிரத்து 800 ஆண்டுகளுக்கு முன்னரே வரலாற்று உதயகால குடியிருப்புகள் கந்தரோடையில் இருந்தன என்பதற்கான சான்றுகள் விஞ்ஞானபூர்வமான காலக்கணிப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே வடக்கில் முதன்முதலில் முறையாகமேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான காலக்கணிப்பாகும்.

குடாநாட்டில் வரலாற்று உதயகாலம் தொட்டு ஆரம்ப வரலாற்றுக்காலம் வரையிலான பண்பாட்டம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு. 750ஆம் ஆண்டுக்குரியதாகவும், கி.மு. 400ஆம் ஆண்டுக்குரியதாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கந்தரோடை அகழ்வாய்வின்போது வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாடும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதென் பதை அகழ்வுக்குத் தலைமை தாங்கிய கலாநிதிநிமால்பெரேரா தெரிவித்துள்ளார். கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சான்றாதாரங்கள் ஓ.எஸ்.எல். காலக்கணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. இத்திகதியிடல் முடிவுகள் மிகவிரைவில் கிடைக்கப்பெறும் என நம்புகின்றோம் - இவ்வாறு இவ்வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சான்றுகளுக்குரிய ஓ.எஸ்.எல். காலக்கணிப்பு சாதகமாக அமையப்பெறும் நிலையில் யாழ்ப்பாணத்தின் வரலாற்றுக்கு முற்பட்டகால பண்பாட்டின் காலமானது இன்னும் பல நூற்றாண்டுகளாக அதிகரிக்கப்படும் என்பதில் மாற்றமில்லை.

வரலாற்று உதயகாலத்துக்குரிய இரும்புத் தொழில்நுட்பம், நெல் மற்றும் தானியங்களின் சாகுபடி, கால்நடைகள் வளர்ப்பு, மீன்பிடித் தொழில்நுட்பம் என்பன சிறப்பாக இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. இவ்வாறான தொன்மையான குடியிருப்புக்குரிய சான்றுகளுடன் பலவகையான மட்பாண்ட சான்றாதாரங்கள், கல் மணிகள், பலவகை மணிகள் போன்றனவும், அவை உற்பத்தி செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களும்

கிடைக்கப்பெற்றிருந்தன. அத்துடன் கார்ணிலியன் கற்கள், பலவகை நாணயங்கள், முத்திரைகள், எலும்பிலான எச்சங்கள் போன்ற பல சான்றாதாரங்களும் கிடைக்கப்பெற்றன. இவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்று உதயகாலப் பண்பாண்டம்சங்கள் இற்றைக்கு 2 ஆயிரத்து 800 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்து தொடர்ச்சியுற்றதை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளன. குறிப்பாக தொன்மையான குடியிருப்புகள், நிரந்தர பொருளாதாரக் கட்டமைப்பு, சிறுதொழில்நுட்பங்கள், அயல் நாட்டுத் தொடர்புகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை கந்தரோடை, அநுராதபுரம், திஸமாகரகம போன்ற தொல்லியல் மையங்களுடன் ஒப்பிடக் கூடியதாக எடுத்துக்காட்டியுள்ளன - என்றார். (அ-ஒ-125)

### 100 ஆவது...

சரணையுடன் சட்டவிரோத சிங்களக் குடியேறிகள் ஆக்கிரமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாற்பண்ணையாளர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று 100 நாள்களை எட்டியது. இதனை முன்னிட்டு மட்டக்களப்பில் பாற்பண்ணையாளர்களால் நடைபவனியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் இதுவரை 35 மாடுகள் சிங்களக் குடியேறிகளால் கொல்லப்பட்டுள்ளன. 136மாடுகள்காயமடைந்துள்ளன. மேலும், 207 மாடுகள் காணாமற்போயுள்ளன. சட்டவிரோத சிங்களக் குடியேறி விவசாயிகள், கூரிய ஆயுதங்கள் கொண்டு மாடுகளைத் தாக்கி அதன் எச்சங்களை புல்வெளியில் வீசிச் செல்கின்றனர்.

இதேவேளை - சட்டவிரோதமான முறையில் விவசாயம் செய்து வரும் சிங்களக் குடியேறி விவசாயிகளை அகற்றுமாறு ஏறாவூர் நீதிமன்றம் நவம்பர் 13ஆம் திகதி உத்தரவிட்டது. ஆனால், இதுவரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை என, பண்ணையாளர்கள் குற்றம் சாட்டினர். இந்த சட்டவிரோத விவசாயிகளின் தாக்குதல்களால் காயமடைந்த மாடுகளுக்கு சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவர்கள் கூடச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-இ)

### ஜனாதிபதிக்கு...

மனு வழங்குவதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

28 வருடங்களாகச் சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மனுவைத் தயாரிக்கும் முகமாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இடையேயான சந்திப்பை குரலற்றவர்களின் குரல் அமைப்பு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று ஒழுங்குபடுத்தியிருந்தது.

சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மு.கோமகன்; 28 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மனுவை வழங்கவுள்ளோம். சகல பொது அமைப்புகளும் ஒன்றிணையவேண்டும். பொது மன்னிப்பின் அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(அ-ஒ-27-66)

**பிரத்தியேக வகுப்புகள்**
A/L இணைந்த கணிதம் 2024, 2025
மாணவர்களுக்காக தனியாக or குழுவாக கற்பிக்கப்படும்.
077 832 4002

**பணியாளர் தேவை**
மானிப்பாயில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர் தேவை.
✓பில் கிளாக்
✓கணக்காளர்
✓ஆசாரி வேலை
✓வெல்டிங் (அனுபவம் உள்ளவர்கள்)
தொடர்பு:-076 276 8233

**முதியோர் / நோயாளர் பராமரிப்பு சேவை**
உங்கள் இல்லங்களில் வருகை தந்து முதியோர் / நோயாளர் பராமரிப்பு சேவைகளை எமது ஆண்/ பெண் பராமரிப்பாளர்கள் வழங்குவார்கள். நீண்ட கால/ குறுகிய கால சேவைகளை பெற
(CS 27457 J-1)
தொடர்புகளுக்கு :074 199 9100

**பெயர் மாற்றம்**
சோலைநகர், உமையாள்புரத்தில் வதியும் **மொஹமட்றபிக் செசிலாந்தினி** ஆகிய நான், எனது பெயரை, **மொஹமட்றபிக் றாபியா** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும், **மொஹமட்றபிக் றாபியா** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.
**மொஹமட்றபிக் றாபியா**
(CR 41380) S-1

**Cloud 99 UK base IT Company**
Looking for:
➡Graphic designer
&
➡Video Editor
Send your C.V - 076 124 1561
More details :- Beeta Consulant K.K.S Road, Kondavil.
(CS 27464) S-T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக...

கடந்த வியாழக்கிழமை இரவு மழை பெய்து கொண்டிருந்ததை சாதகமாகப் பயன்படுத்தி கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது. அங்கிருந்து 75 ஆயிரம் ரூபா பணத்தையும் பொருள்களையும் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## எரிபொருள்...

முன்னெடுக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக அறிவுறுத்தியுள்ளார். அனைத்து சந்தர்ப்பங்களிலும் 50 வீதக் கையிருப்பை பேணுமாறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ஒ-இ)

## கொரோனாத்...

அறிவித்துள்ளது. 8 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 3 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (அ-ஒ-இ)

## 8 கிராம்...

வயதான ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய தாவடி பகுதிக்கு விரைந்த பொலிஸார் வீதியால் நடந்து சென்றவரை வழிமறித்துச் சோதனையிட்ட போது உயிர்கொல்லி ஹெரோய்னை கைப்பற்றினர். கைதானவர் கொழும்பில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

## மின்வெட்டை...

தவிர்க்குமாறு இலங்கை மின்சார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். அவசரப் பராமரிப்புப் பணிகளுக்காக மின்சாரம் துண்டிக்கப்படுவதைத் தவிர்க்குமாறும் தாம் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## மீண்டும்...

யுள்ளார். கொரோனா திரிபு இலங்கையிலும் பரவி வருவதன் காரணமாக அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## மதுபானசாலைகள்...

யங்களும் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமையும் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)


### பணிப்பெண் தேவை

யாழ். மல்லாகம் பகுதியில் சிரிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம் (30,000/=)

தொடர்பு : 077 170 0145
077 158 2384

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL, AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

### பணிப்பெண் தேவை

காரைநகரில் உள்ள வீட்டை பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.
வயதெல்லை: 45 - 60

077 749 7461

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவில் பின்புறமாக 3 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இராசபாதை வீதி கரையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 882 8638

### விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியில்
**சொகுசு வீடு** விற்பனைக்குண்டு.

Contact number
+94 74 002 2219

### சிறுநீரகம் தேவை

சிறுநீரக செயலிழப்பால் பாதிப்படைந்த A+ இரத்த வகை உடைய நபர் சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக சிறுநீரக தானம் செய்ய விரும்பும் A மற்றும் O இரத்தவகை உடையவர்களை தேடுகிறார். HLA report உடையவர்கள் வரவேற்கப்படுவர்.

தொடர்புகளுக்கு:
077 301 6651

(cs.53089) (N.1)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- * 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- * **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
- * 20 அடிப்பாதையுடன்
- * சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- * யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- * நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- * நன்னீர் ஊற்று நிலம்
- * தரகர் தேவையில்லை.
- * **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
071 173 3911

(CS 53252) A-1

### வீடு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் 2 3/4 பரப்பளவை கொண்ட மூன்று அறைகள், முழுவதும் மார்பிள் பதிக்கப்பட்ட, அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 664 8287

### காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோவிலில் இருந்து 200m இல் 2, 2 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டங்கள் விற்பனைக்கு உண்டு. காணி நன்னீருற்றுக் கொண்ட குடியிருப்புப் பிரதேசம்.

தொடர்புகளுக்கு: 077 077 3052
076 430 8648
074 375 5446

(CS 27453) S-1

### சிறிராம் ஜுவல்லர்ஸ்

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடி**



- * செய்கூலி சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
- * அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.

**ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.**

- * அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- * தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

தொடர்புக்கு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

### கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிட்டட் இன்

*மாபெரும் வேலை வாய்ப்பு* 2024

கோப்லைப் காப்புறுதி நிறுவனம் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மற்றும் கிராமிய வங்கிகளின் மூலதனத்தின் உற்பத்தியாளர் மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய நிறுவனம் ஆகும். இந் நிறுவனம் வணிகத் துறையில் உயர் தகைமைகள் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் ஊடாக கணினி மயப்படுத்தப்பட்ட பிரதான கிளைகள் 88 மற்றும் 126 காப்புறுதி சேவை மையங்களின் கீழ் சேவைகள் வழங்கப்படுகின்றன.

வடமாகாணத்தில் காணப்படுகின்ற மாவட்டங்களில் இயங்குகின்ற கிளைகளில் 2024ம் ஆண்டிற்கான பின்வரும் வெற்றிடங்களிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

- கிளை முகாமையாளர் (BRANCH MANAGER) நிரந்தரம் காப்புறுதித்துறை மற்றும் முகாமைத்துவ அனுபவம் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், சுன்னாகம், முல்லைத்தீவு, சாவகச்சேரி, வவுனியா, மானிப்பாய், நெல்லியடி)
- விற்பனை முகாமையாளர் (SALES MANAGER) நிரந்தரம் காப்புறுதித்துறை அனுபவம் (வடமாகாண அனைத்து கிளைகளிற்கும்)
- விற்பனை அதிகாரி (SALES EXECUTIVE ) நிரந்தரம் காப்புறுதித்துறை அனுபவம் (வடமாகாண அனைத்து கிளைகளிற்கும்)
- வெளிக்கள உத்தியோகத்தர் க.பொ.த சாதாரணதரத்தில் 6 பாடங்கள் சித்தி தற்போது A\L பரீட்சையினை மேற்கொண்ட மாணவர்கள் அரச அல்லது தனியார் துறையில் ஓய்வு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.



**யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், நெல்லியடி, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கிளைகளிற்கு மேற்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.**

வருமானம் மற்றும் ஏனைய நன்மைகள் நேர்முகத்தேர்வில் தெரிவிக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி அல்லது Whatsapp இல

zmlife.northern@coopinsu.com
rm chunnakam.life@coopinsu.com
0710232288 ,0777142955
024-2227962




### வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.
வயதெல்லை 25-40 (பெண்)
சம்பளம் 40,000/=
அருகில் இருப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 0777 898 862

### சமையலாளர் தேவை

சிற்றுண்டி மற்றும் தேநீர் தயாரிப்பதற்கு ஆண் சமையலாளர் தேவை.

தொடர்பு :-
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

### சிறுநீரகம் தேவை

50 வயது ஆண் ஒருவருக்கு O+ வகை சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:- 075 474 1392
074 016 7518

### வீடு வாடகைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் 4 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

076 724 4918




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

கஞ்சாவைத் தேடியெங்கும் வேட்டை
கண்கள்பல நோக்கினவே 'றோட்டை'
பூஞ்சணம் பிடிச்செடியை
புக்குப்புக்கெனப் புகைத்தே
நோஞ்சானாக்கலாமோ இந்த நாட்டை?
– அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை (24.12.2023) சிகரம் : 179



# இமாலயப் பிரகடனம்

# யாருக்குச் சேவகம் செய்யும்?

○ நிலாந்தன்

இமாலயப் பிரகடனத்தைச் செய்ததன் மூலம், உலகத் தமிழர் பேரவை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியில் பெருமளவுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது. அந்த அமைப்புடன் இணைந்து மஹிந்தவைச் சந்தித்த கனேடியத் தமிழ்க் காங்கிரஸின் சில உறுப்பினர்கள் கனடாவில் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றார்கள். தாயகத்தில் பெரும்பாலான கட்சிகள் அந்தப்பிரகடனத்தை நிராகரித்துவிட்டன. குடிமக்கள் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தமிழரசுக்கட்சி இதுவிடயத்தில் அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. பிரகடனம் சம்பந்தரிடம் கையளிக்கப்பட்ட போது அவர் "இந்த முன்னெடுப்பை நாம் பல ஆண்டுகளுக்குமுன்பே செய்திருக்கவேண்டும்" என்று கூறியுள்ளார். ஆனால் சிறீதரனைப் போன்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் அதற்கு எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள்.

அந்தப்பிரகடனத்தின் பின்னணியில் சுமந்திரன் இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. பிரகடனமானது போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை அரசைக் காப்பாற்றும் உள்நோக்கமுடையது என்று புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. இலங்கை வரலாற்றில், மகா சங்கத்தோடு தமிழ்த்தரப்பு கையெழுத்திட்ட முதலாவது உடன்படிக்கை இது. ஆனால் அது நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களால் பெருமளவுக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரகடனக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தரும் தகவல்களின்படி, பிரகடனக்குழு நேபாளத்துக்குச் சென்ற போது அதற்கு வேண்டிய வசதிகளை சுவிட்ஸர்லாந்து செய்து கொடுத்திருக்கின்றது. அந்த நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் முன்பு அரசியல் செயலராக இருந்த ஒருவர் மேற்படி சந்திப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறார். ஆயின், அந்தப் பிரகடனத்தின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்கு நாடுகளின் உள்நோக்கங்கள் இருப்பதாக எடுத்துக்கொள்ளலாமா?

அவ்வாறு ஒரு பிரகடனத்தை உருவாக்குவதால் மேற்கு நாடுகளுக்கு என்ன நன்மை? பிரகடனமானது ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது முன்னெடுத்து வரும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு மேலும் பலம் சேர்க்கும். அதாவது அவர் பொறுப்புக்கூறும் விடயத்தில் முன்னேறுவது போன்ற ஒரு தோற்றத்தை அது கட்டியெழுப்ப உதவும். அதன்மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறும் வழிகளை இலகுவாக்கும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டால் அது ஒப்பீட்டளவில் தமக்கு அனுகூலமானது என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன. எனவே தேர்தலை நோக்கி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்தவேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. போர்க் குற்றங்களுக்கு எதிரான பரிகார நீதியை அழுத்தமாகக் கேட்பது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்தான். இந்த விடயத்தில் கனடாவில் உள்ள புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கின்றது. எனவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றை மகா சங்கத்துடன் உடன்பாட்டுக்கு வர வைப்பதன் மூலம் சிங்கள - பௌத்தர்களின் பயத்தைக் குறைக்கலாம் என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றனவா?

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் "சமூகங்களுக்கு இடையேயான புரிதலை விசாலமாக்குவதற்கும், நீடித்த நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இந்த முயற்சியை நாங்கள் பாராட்டி வரவேற்கிறோம்" என்று தனது ருவிற்றரில் எழுதியுள்ளார். இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸ் தூதுவர் சிறி வோல்ட் பிரகடனக் குழுவைச் சந்தித்தபின். "இந்தச் சந்திப்பும், ஐக்கியத்துக்கான தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட பன்மைத்துவமும் அமைதியும் கொண்ட இலங்கையை உருவாக்கும் முன்னெடுப்பிலான இமாலயப் பிரகடனத்தை ஆதரிப்பதும் எமக்குப் பெருமை தருவதாகும். நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்." என ரூவீற் செய்துள்ளார்.

பொதுவாக மேற்கு நாடுகளின் நல்லிணக்க முயற்சிகளை மகாசங்கம் முழுமனதாக ஆதரித்தது கிடையாது. ஆனால் இமாலயப் பிரகடனத்தை மகா சங்கம் எடுத்த எடுப்பில் எதிர்க்காததற்குக் காரணம் என்ன? இலங்கையில் மகா சங்கம் எனப்படுவது இலங்கை அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதிதான். அது ஒரு மத நிறுவனம் என்பதை விடவும் அரசியல் நிறுவனம் என்பதே அதிகம் பொருத்தமானது. பல நூற்றாண்டு காலமாக அரசியல் செய்த ஒரு நிறுவனம். அதற்கு வேண்டிய பாரம்பரியமும் அனுபவமும் அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கு அவர்களுக்கு இது போன்ற பிரகடனங்கள் தேவை.

பிரகடனக்குழு மல்வத்த பீடத்தினரைச் சந்தித்த பொழுது எதிர்பார்த்ததற்கு மாறாக மகாநாயக்கர் அதிகம் சினேகபூர்வமாகப் பழகியதாக பிரகடனக் குழுவினர் தெரிவிக்கின்றார்கள். பொதுவாக விருந்தாளிகள் வரும் பொழுது மகாநாயக்கர் தமது உதவியாளர்களை பிரித் ஓதுமாறு பணிப்பதுண்டு. ஆனால் பிரகடனக்குழுவுக்காக அவரே பிரித் ஓதியிருக்கிறார். "கடந்த காலங்களில் கட்சிகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் இல்லாமல் போவதற்கு வீதிக்கு இறங்கிய பௌத்த பிக்குகள்தான் காரணமென்று தமிழ்ப் பிரதிநிதிகள் கூறியது உண்மைதான்...... இனவாதத்தையும் வெறுப்பையும் போதிக்கும் இந்தப் பிக்குகளில் ஒரு சிறுபான்மையினர் உரத்த குரலில் இவற்றைப் பேசி வெற்றி பெற்றனர். ஏனென்றால் சமாதானத்தையும் சமத்துவத்தையும் விரும்பும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் அந்தச் சந்தர்ப்பங்களில் போதுமானஅளவு உரத்த குரலில் பேசவில்லை. எதிர்காலத்தில் நாம் அதைச் செய்ய வேண்டும்" என்றும் மகாநாயக்கர் கூறியுள்ளார்.

பௌத்த மகா சங்கங்கள் இதுவரை வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் கருத்துகளின்படி அவர்கள் இமாலயப் பிரகடனத்தை எதிர்க்கவில்லை என்பது ஒரு தொகுக்கப்பட்ட அவதானிப்பு. பௌத்த மகாசங்கம் எதிர்க்கவில்லை என்றால், அது சிங்கள-பௌத்த கட்சிகளின் முடிவுகளில் பெருமளவு தாக்கத்தைச் செலுத்தும். அதே சமயம் இந்தப்பிரகடனம் ரணிலைப் பிணையெடுக்கக் கூடியது என்பது எதிர்க்கட்சிகளுக்கு உவப்பானது அல்ல. எனினும் மகாசங்கத்தைப் பொறுத்தவரை அது கட்சி கடந்து சிங்கள - பௌத்த அரசுக் கட்டமைப்பை எப்படிப் பாதுகாப்பது என்றுதான் சிந்திக்கும்.

ஒருபுறம் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றும் தகமை ரணிலுக்கே இருப்பதாக மகா சங்கம் கருதுகின்றது. எனவே ரணிலைப் பலப்படுத்த இந்தப்பிரகடனம் உதவும். இன்னொருபுறம், அவர்களுடைய போர்வெற்றி நாயகர்களான ராஜபக்சக்களையும் படைப்பிரதானிகளையும் பாதுகாக்கவேண்டும். ஏற்கனவே கனடா மூத்த இரண்டு ராஜபக்சக்களுக்கும் படைப்பிரதானிகளுக்கும் எதிராகத் தடைகளை விதித்திருக்கிறது. அமெரிக்காவிலும் நிலைமை இறுக்கமாக இருக்கிறது. சில ஐரோப்பிய நாடுகள் முன்னாள் படைத்தளபதிகளுக்கு விசா வழங்குவதில்லை. கடைசியாக நடந்த ஐ.நா. கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உதவி ஆணையாளர் மேலும் 10 படைத்தளபதிகளைக் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார். எனவே சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகிய படைக்கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டிய தேவை அதே அரசுக் கட்டமைப்பின் மற்றொரு பகுதியான பௌத்த மகா சங்கத்துக்கு உண்டு. அந்த அடிப்படையில் இது போன்ற பிரகடனங்களின் மூலம் மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்தி, நல்லிணக்க முயற்சிகளைத் தமக்குப் பாதுகாப்பான எல்லைக்குள் இருந்தபடி, ஊக்குவித்து, தமது படைக்கட்டமைப்பைப் பாதுகாக்க மகா சங்கம் முயற்சி செய்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாமா?

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்த்தால், தெளிவாகத் தெரிவது என்னவென்றால், ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கவேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு உண்டு. சர்வதேச நாணயநிதியத்துக்கு உண்டு. பௌத்த மகாசங்கத்துக்கு உண்டு. ராஜபக்சக்களுக்கு உண்டு. எனவே, மேற்கண்ட எலோரது நலன்களையும் ஒரு பொதுப்புள்ளியில் இணைப்பதற்கு இமாலயப் பிரகடனம் உதவுமா?

அதேசமயம், உள்ளூரில் உலகத் தமிழர் பேரவைக்கு வேறு ஒரு உள்நோக்கம் இருக்க முடியும் என்று யாழ்ப்பாணத்தில் ஊடக வட்டாரங்களில் ஊகங்கள் உண்டு. சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையே இப்பொழுது இடைவெளி அதிகம். சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் ரணிலின் மீது அளவுக்கு மிஞ்சி வாய்வைத்துவிட்டார். அதனால் இடைவெளி மேலும் அதிகரித்திருக்கின்றது. ஆனால் அடுத்த ஜனாதிபதியாக ரணில் வருமிடத்து, அப்படி ஒரு இடைவெளியை வைத்திருப்பது மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்குப் பாதுகாப்பாக இருக்காது. எனவே சுமந்திரனை ரணிலை நோக்கிக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு இப்படி ஒரு பிரகடனம் உருவாக்கப்பட்டதா? என்பது அந்த ஊகம். இந்தப் பிரகடனம் அதன் இறுதி அர்த்தத்தில் ரணிலைப் பிணையெடுக்கும். அவ்வாறு சுமந்திரனுக்கு நெருக்கமான அமைப்பொன்று ரணிலைப் பிணையெடுத்து, அவருடைய நன்மதிப்பை வென்று, அதன்மூலம் சுமந்திரனுக்கும் ரணிலுக்குமான இடைவெளியை குறைக்கலாம் என்று ஒரு விளக்கம் கூறப்படுகின்றது.

இருக்கலாம். மேற்படி பிரகடனம் ரணிலைப் பிணையெடுப்பதற்கு உதவும் என்பது வெளிப்படையானது. அது மேற்கு நாடுகளின் நல்லிணக்க நிகழ்ச்சி நிரலை சிங்கள - பௌத்த நோக்கு நிலையிலிருந்து முன்னெடுப்பதற்கும் உதவலாம். போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைப் பாதுகாப்பதற்கு உதவலாம். சிலசமயம் சுமந்திரனுக்கும் ரணிலுக்குமிடையில் இடைவெளியைக் குறைக்க உதவலாம். ஆனால், தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை வென்றெடுப்பதற்கு அது உதவப் போவதில்லை. ■

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.குமுதன்
வவுனியா.

# மாளிகைக் கிராமம்: பண்பாட்டுத் தொடர்ச்சியின் அடித்தளம்







வடக்குமாகாணத்தில் அடங்காப்பற்று என்று அழைக்கப்படும் வன்னிமண், தமிழர்களின் நெடிய பாரம்பரியத்தின் வரலாற்றையும், வாழ்வியலையும் தன்னுள் புதைத்து வைத்திருக்கின்றது. வன்னியின் தொன்மை, அங்கு வாழ்ந்த குடும்பங்களின் பண்பாடு, அரசாட்சி பற்றிய சான்றுகள், வன்னியை ஆக்கிரமித்தவர்களின் குறிப்புக்களில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன. அவையும் முழுமையானவையல்ல. ஆயினும் எண்ணற்ற குளங்கள், மண்ணில் புதையுண்டு மக்கிப்போயுள்ள எச்சங்கள், நீர்நிலைகள் போன்றவை வன்னியில் ஒரு பெரும்சந்ததியின் செழிப்பான இருப்பினைப் புலப்படுத்தவே செய்கின்றன. ஒரு மக்கள் குழு தமது தற்கால இருப்பின் அவசியத்தினை வெளிப்படுத்தவும், எதிர்கால இருப்பின் வழிமுறைகளை வகுத்துக்கொள்வதற்கும் ,சென்றகால வரலாற்றினை தொட்டுச்செல்வது அவசியமாகின்றது. ஏனெனில் அவை வரலாற்றுத்திரிபுகளையும் புனைவுகளையும் தவிர்க்கும் தன்மைகொண்டவை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வன்னி என்ற நிலப்பரப்பு பரந்து விரிந்து காணப்பட்டாலும் தற்போது அது, நிர்வாக அடிப்படையில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா எனச் சுருங்கியுள்ளது. அவற்றில் வவுனியா மாவட்டம் தனித்துவமான அடையாளங்களையும் தொன்மைகளையும் இன்னும் கொண்டுள்ளது. அந்தவகையில் வவுனியாவின் பழமையான, பாரம்பரியத்தைக் கொண்ட கிராமமான 'மாளிகைக்கிராமம்' வன்னி மக்களின் வரலாற்றின் நீட்சியைப் பறைசாற்றுவதுடன் , நமது தமிழினத்தின் இருப்பியல் அடையாளங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

## மாளிகைக் கிராமம் ஓர் அறிமுகம்

மாளிகைக்கிராமம் வவுனியா பிரதேசசெயலாளர் பிரிவின் நிர்வாக அலகுக்கு உட்பட்டது. ஓமந்தைப் பகுதியிலிருந்து சேமமடு செல்லும் வீதியில் 12 கிலோமீற்றர் தொலைவில் இந்தக்கிராமம் அமைந்துள்ளது. போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வு , நகரங்களின் மீதான மக்களின் நாட்டம் என்பன இந்தக் கிராமத்தை சோபையிழக்கச் செய்திருந்தாலும் எஞ்சியுள்ள குடிகளும், இயற்கையின் வனப்பும், அமைதியானவாழ்வியலும் கிராமத்துவாசனையை நிச்சயம் தருவிக்கும் என்பதில் ஐயமில்லை. வரலாற்றுக்கு முந்திய வவுனியா மாவட்டத்தில், மிகப்பழமையான கிராமங்களில் இது முதன்மையானது. இந்தக்கிராமம் தொடர்பாக விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமையினாலும், பண்டைய இலக்கியங்களில் போதிய சான்றாதாரங்கள் இல்லாமையும் இந்தக்கிராமத்தின் தொன்மை தொடர்பாக முழுமையாக அறிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும் 1895ஆம் ஆண்டு பிரித்தானியர்களின் ஆட்சியின் போது வவுனியாப்பிரிவின் உதவிஅரசாங்க அதிபராகக் கடமையாற்றிய யே.பி.லூயிஸ் என்பவரால் தொகுக்கப்பட்ட 'வன்னிமாவட்டங்களின் கையேடு'எனும் நூலில் இந்தக் கிராமம் பற்றியும், அங்கு அமைந்துள்ள விநாயகர் ஆலயம் பற்றியும் சிறு குறிப்பொன்று காணப்படுகின்றமை இந்த ஊரின் தொன்மைக்குச் சான்றாகின்றது.

### பெயர்க்காரணம்

மாளிகை என்றபெயர் பலநூறுவருடங்களுக்கு முன்னராகவே இருந்ததாக கிராமத்தின் மூத்தகுடிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக ஆதிகாலத்தில் மாளிகைபோன்ற கட்டடம் ஒன்று அந்தப்பகுதியில் அமைந்திருந்ததாலேயே இந்தப் பெயர் வந்தது என்கின்றனர் வரலாற்றாய்வாளர்கள். அதற்கான கட்டட எச்சங்களும் அங்கு காணப்படுகின்றன. இதேவேளை குறித்த பகுதியில் மாளிகை அமைத்து சிற்றரசர்கள் ஆட்சிசெய்தமையினால் அந்தபெயர் சூட்டப்பட்டதாகவும் ஒருசாரார் தெரிவிக்கின்றனர். அதனை உறுதிப்படுத்துவதற்கான இலக்கியக்குறிப்புக்களோ, ஏனையசான்றுகளோ போதியளவில் கிடைக்கவில்லை. இருப்பினும் ,யே.பி.லூயிஸின் குறிப்பின்படி சுமார் 120வருடங்களுக்கு முன்பாகவே கிராமத்தின் பெயர் 'மாளிகை' என்று சுட்டப்படுவதால், இது ஒரு பழமையான கிராமம் என்றும், ஊருக்கான பெயரும் நீண்டகாலமே இருக்கின்றது என்பதையும் ஊகித்தறியமுடியும்.

### குளத்தை அண்டிய குடிகள்

இலங்கையின் ஆதிக்குடியேற்றங்கள் அனைத்தும் நீர்நிலைகளையும், ஆறுகளையும் அடிப்படையாககொண்டே உருவாகியிருந்தன. மாளிகைக் கிராமமும் அதற்கு விதிவிலக்கானதல்ல. இந்தக் கிராமத்தின் ஆரம்பகாலக் குடியேற்றமும் குளத்தினை அண்டியே அமைந்திருந்தது. ஊரில் உள்ள பிரதானகுளம் "மாளிகைக்குளம்" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இது ஆரம்பகாலத்தில் நீர்வழிந்தோடும் ஆற்றுப்படுக்கையாகவே இருந்துள்ளது. அதனை அண்டியே மாளிகை கிராமத்துக்குரிய ஆதிக்குடிகள் தமது இருப்பிடங்களை நிறுவியுள்ளனர். ஆரம்பத்தில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்களை கொண்ட கூட்டுக்குடும்ப வாழ்கைமுறை அங்கு இருந்துள்ளது. பின்னர் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தநிலையில் அவை கிராமத்தின் ஏனையபகுதிகளிலும் குடியேற்றங் களை ஏற்படுத்தியுள்ளது. காலப்போக்கில் குடும்பங்கள் பரிணாம வளர்ச்சியடைய, அதன்மூலம் செங்காராத்திமோட்டை என்ற புதிய கிராமமும் உருவாகியது .அங்கு 35 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தற்போது வாழ்ந்துவருகின்றனர். அந்தக்கிராமம் முற்றுமுழுதாக மாளிகைக் குடிகளின் வம்சாவளி மக்கள் என சொல்லப்படுகின்றது. அத்துடன் திருமணஉறவுகள் மூலம், அயல்கிராமங்களான நொச்சிகுளம் அலைகல்லு போட்டகுளம் ஆகிய இடங்களிலும் மாளிகைமக்கள் உறவினர்களைக் கொண்டுள்ளனர்.

### மாளிகைக்குளம்

மாளிகைக்கிராமத்தின் அடிப்படை மூலாதாரமாக பிரதான குளம் விளங்குகின்றது. சிறிய ஆற்றுப்படுக்கையாக இருந்த இந்தக்குளம் குடிப்பெருக் கம் அதிகரித்து தேவைகளும் அதிகரித்தபோது கிராமவாசிகளால் காலத்துக்குக் காலம் புனரமைக்கப்பட்டு வந்துள்ளது. இறுதியாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் குளத்தின் அணைக்கட்டு பெருப்பிக்கப்பட்டு குளமும் புனரமைக்கப்பட்டுள்ளது. ஒரு சந்ததியின் உருவாக்கத்துக்கு அடித்தளமிட்ட இந்தக்குளத்தில் தற்போது 11 அடி வரை நீரைத் தேக்கிவைக்கமுடியும். 300 ஏக்கர் அளவான நெற்காணிகளுக்கு இரண்டுபோகமும் நீரைவழங்க கூடியதாக அது மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆதிக்குடிகளுக்கு அடித்தளமிட்டது போலவே தற்போதைய குடிமக்களின் வாழ்வாதாரத்துக்கும் இது அடிப்படை ஆதாரமாக அமைந்துள்ளது.




1895ஆம் ஆண்டு பிரித்தானியர்களின் ஆட்சியின் போது வவுனியாப் பிரிவின் உதவிஅரசாங்க அதிபராகக் கடமையாற்றிய யே.பி.லூயிஸ் என்பவரால் தொகுக்கப்பட்ட 'வன்னிமாவட்டங்களின் கையேடு' எனும் நூலில் இந்தக்கிராமம் பற்றியும், அங்கு அமைந்துள்ள விநாயகர் ஆலயம் பற்றியும் சிறு குறிப்பொன்று காணப்படுகின்றமை இந்த ஊரின் தொன்மைக்குச் சான்றாகின்றது.

ஆதிகாலத்தில் மாளிகைபோன்ற கட்டடம் ஒன்று அந்தப்பகுதியில் அமைந்திருந்ததாலேயே இந்தப் பெயர் வந்தது என்கின்றனர் வரலாற்றாய்வாளர்கள்.

### விவசாயமே மூலாதாரம்

வன்னியின் விவசாயப்பண்பாடு பாரம்பரியமிக்கது. இங்கு குடியேறிய ஆதிக்குடிகள் தங்களது உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் விவசாயத்தினை வாழ்வியலாக முன்னெடுத்துள்ளனர். இது இங்கு அமைக்கப்பட்டுள்ள எண்ணற்ற குளங்களின் மூலம் உணரமுடியும். அது போலவே மாளிகைக் கிராமமக்க ளும் விவசாயத்தினை தமது உயிரின் ஆதாரமாகக் கொண்டே பரிணாம வளர்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக நெற்செய்கையே பிரதான வாழ்வாதாரப்பயிராக இருந்துள்ளது. . அதனுடன் இணைந்து விலங்கு வளர்ப்பு, சிறு தானியச்செய்கை போன்றவற்றையும் முன்னெடுத்துவந்துள்ளனர். அவற்றின் தொடர்ச்சியினை தற்போதைய தலைமுறையும் கைக்கொண்டுள்ளது. குறிப்பாக மாளிகைக்குளத்தின் கீழ் பெரும்போகத்தில் 300 ஏக்கர் அளவிலும் சிறுபோகத்தில் 120 ஏக்கர் அளவிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. ஆரம்பகாலத்தில் எருதுமாடுகளை பயன்படுத்தியே விவசாயநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதனால் அநேகமானவீடுகளில் எருதுமாடுகள் வளர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமத்தின் வம்சாவளியைச் சேர்ந்த , வெளிஇடங்களில் வசிப்பவர்கள் அதிகமான விவசாயகாணிகளுக்கு உரித்துடையவர்களாக உள்ளனர். அவர்கள் உரிய காலப்பகுதிகளில் ஊருக்கு வருகைதந்து நெற்செய்கையினை முன்னெடுத்துவருகின்றனர். அதன் மூலம் அறுவடைசெய்யப்படும் நெல் அரிசியாக்கப்பட்டு சேமிக்கப்பட்டு உணவுத்தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது. தற்போதும் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டுவருவதுடன், உரிய விலை கிடைக்கும் பட்சத்தில் அறுவடை செய்த உடனேயே நெல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஒவ்வொரு வீடுகளிலும் மாடுகள் வளர்க்கும் பாரம்பரியம் மாளிகைப்பகுதியில் நீண்டகாலம் இருந்துவந்துள்ளது. அதற்குரிய மேய்ச்சல்நிலங்கள் போதியளவில் அங்கு கிடைக்கின்றன. தேவைக்கு அதிகமான காட்டுவளங்கள் அங்கே கொட்டிக்கிடக்கின்றன.

### சமூக வளர்ச்சி

காலமாற்றம் ,உலகமயமாதல் என்பன கிராமங்களை மையப்படுத்திய வாழ்வியல்முறையில் பலதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அதற்கு மாளிகைக் கிராமமும் விதிவிலக்கல்ல. அங்கு வாழ்ந்தமக்கள் கிராமத்தைவிட்டு வெளியேறி, வவுனியா நகரப்பகுதியிலும் புலம்பெயர்தேசங்களிலும் சென்று குடியேறினர். இதனால் அந்தச்சமூகத்தில் வளர்ச்சிநிலை எட்டப்பட்டுள்ளமையை மறுப்பதற்கில்லை. குறிப்பாக விவசாயப் பண்பாட்டுக்கப்பால், கல்வி பொருளாதார நிலைகளிலும் அந்தச் சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது. வாழ்க்கைக் கட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது. எஞ்சியுள்ள மக்கள் மண்ணின் மைந்தர்களாக மாளிகைக்கிராமத்தின் தொன்மைக்கும் பாரம்பரியத்துக்கும் அடையாளமாகத் திகழ்கின்றனர்.

### தொல்பொருள் பிரதேசம்

கிராமமக்களால் பரம்பரை பரம்பரையாக வழிபடப்பட்டுவந்த காட்டுவிநாயகர் ஆலயவளாகம் ஒரு தொல்பொருள் முக்கியத்துவம் மிக்கபகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலேகூறப்பட்ட மாளிகை என்ற அமைப்பின் எச்சங்களும் அந்தப் பகுதியில் சிதைந்துகிடக்கின்றன. ஊரின் மத்தியபகுதியில் குளத்துக்கு அருகாமையில் இந்த தொல்பொருள்பிரதேசம் உள்ளது. இங்கு கற்களாலான கட்டடம் ஒன்று அல்லது மாளிகை போன்றஅமைப்பொன்று இருந்துள்ளதாக நம்பப்படுகின்றது.

(05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. பத்மநாதன்
*தகைசார் பேராசிரியர்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



# புராதன யாழ்ப்பாணத்தில் பௌத்தமும் தமிழும்



ஒரு மறைந்துபோன நாகரிகத்தின் தரிசனங்கள்









நின்றகோலமான முழுமையான புத்தர் படிமமொன்று வல்லிபுரத்திற் கிடைத்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வல்லிபுரத்தில் ஆழ்வார் கோயிலைப் புனரமைப்பதற்கு நிலத்தை வெட்டியபொழுது, கோயிலின் அத்திபாரம் அமைப்பதற்குள்ள இடத்திலிருந்து 50 யார் தூரத்தில் நிலத்தை வெட்டியபொழுது இந்தப்படிமத்தைக் கண்டனர். அந்தப்படிமம் 1902ஆம் வருடம் வரை கோயிலின் வாகனசாலையில் வைக்கப்பட்டிருந்தது. தாய்லாந்து மன்னர் அதில் ஈடுபாடு கொண்டதாலே தேசாதிபதி ஹென்றி பிளேக் (Henry Blake) அதனை 1906 ஆம் ஆண்டில் அரசரிடம் அனுப்பிவைத்தார். இப்பொழுது அது பாங்கொக் நகரிலுள்ள விகாரமொன்றில் வைக்கப்பட்டுள்ளது. வல்லிபுரம் பொன்னேட்டிலே குறிப்பிடப்படும் விகாரையில் இது ஆதியில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**வல்லிபுரம் பொன்னேடு**

வல்லிபுரத்திலே விஷ்ணுகோயில் வளாகத்தில் 1936 ஆம் ஆண்டில் நிலத்தை வெட்டியபொழுது வாசகம் எழுதிய பொன்னேடொன்றைக் கண்டெடுத்தனர். அது பிராகிருத மொழியில் வாசகம் எழுதிய பொன்னேடு. யாழ்ப்பாணத்திலுள்ள கி.பி.ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கல்வெட்டுகள், பெயர் எழுதிய உலோகப் பொருள்கள், மட்கலங்கள் என்பவற்றை எவரும் அறிந்திருக்காத நிலையிலே, அதன் கண்டுபிடிப்பு வியப்புக்குரியதாகி விட்டது. பொன்னேட்டின் வாசகத்தைப் படித்து அதன் வாசகத்தையும் ஆங்கில மொழிபெயர்ப்பையும் விளக்கக் குறிப்புகளோடு பரணவிதான வெளியிட்டார். அவருடைய வாசகத்தில் மூன்றிடங்களிலே பிழைகள் காணப்படுகின்றன. நாகதீவில் ஆட்சிபுரிந்த பிரதானியின் பெயரை 'இஸிகிரய' என்று பிழையாகப் படித்துள்ளார். ஆனால் சாசனத்திற் காணப்படுவது 'ஸிவிரய' என்பதாகும். அது 'ஸிவிராயன்' என்ற தமிழ்ப் பெயரின் பிராகிருத வடிவமாகும். 'ஸிவிரய' என்பது ஸிவி, ரய(ராய) என்னும் சொற்களால் இணைந்த கூட்டுமொழித் தொடர். ஸிவி என்பது பௌத்த ஜாதகக் கதைகளிலும் இந்திய இதிகாச, புராணங்களிலும் போற்றப்படும் அரசனாகிய சிபிச்சக்கரவர்த்தியின் பெயர். ஸிவி ஜாதகம் என்பது அவனைப் பற்றிய கதைகளிலொன்றாகும். ஸிவிரய என்பதற்கு முன்னுள்ள இ (.|.) என்ற எழுத்தைப் இப்பெயரின் முதலெழுத்தாகவன்றி, அதனைச் சுட்டெழுத்தென்று கொள்வதே பொருத்தமானது.

**பொன்னேட்டிலே காணப்படும் ணகதி$_3$வ என்ற பெயரைப் பரணவிதான நகதி$_3$வ என்று அடையாளம் கண்டார். ஆனால் இச்சொற்கள் இரண்டுக்கும் இடையில் ஒருநுட்பமான வேறுபாடு உண்டு. ணகதி$_3$வ என்பது ணாக$_3$தீவு (குறியீடு) என்ற தமிழ்ப் பெயரின் பிராகிருத மயமாக்கம் பெற்ற வடிவம். பிராகிருத மொழியில் எழுதிய வாசகமொன்றில் அந்தமொழியில் வழங்கிய பெயரொன்றை (குறியீடு) தமிழ்மயமாக்கிய வடிவத்தில் எழுத வேண்டிய தேவை ஏற்படாது.**

**எனவே பொன்னேட்டிலுள்ள பெயரின் வடிவத்தை ணகதிவ (குறியீடு) என்னும் தமிழ்ப் பிராமி வடிவத்தை பிராகிருத மயப்படுத்தினார்கள் என்பதே பொருத்தமான விளக்கமாகும். எனவே பொன்னேட்டின் மூலம் நாட்டின் பெயரும் அதில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னனின் பெயரும் முறையே ணா(நா)கதீவு, ஸி(சி)விராயன் என்னும் தமிழ்**

5

மொழிப் பெயர்கள் என்பது தெளிவாகின்றது. இது மொழியியல் அடிப்படையில் வேறோரிடத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

கந்தரோடையிலுள்ள பௌத்த கட்டுமானங்களிலும் பௌத்தப் பள்ளியிலே பயன்படுத்திய பாவனைப் பொருள்களிலும் தமிழ்மொழியிற் பெயர்கள் எழுதப்பட்டுள்ளமை வரலாற்றுச் சிறப்புடைய அம்சமாகும். கந்தரோடையில் 1966 இல் நடைபெற்ற அகழ்வுகளிற் கிடைத்த பலவகையான பண்பாட்டுச் சின்னங்கள் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. புத்தர் படிமம், புத்தர்பாதம், நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட சிற்றுருவமான தாதுப்பேழைகள், கட்டுமானங்களின் துண்டமான தூண்கள், பாவனைப் பொருள்களான மட்கலங்களின் ஓடுகள், நீரேந்து கலன்கள், குவளைகள், அம்மி, குழவி, ஆட்டுக்கல் முதலான உணவு தயாரிக்கும் பொருள்கள் என்பன அவற்றுள் அடங்கும்.

அவ்வாறான பொருள்கள் எல்லாவற்றிலும் வேறுபாடின்றித் தமிழ்மொழியிற் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. அவை தமிழ்ப் பிராமி வடிவங்களிலும் எழுதப்

**கந்தரோடையிலே காணப்படும் தூபி போன்ற கட்டுமானங்கள் சிலவற்றின் அடித்தளங்களில் தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதிய சிறிய வசனங்களின் அடையாளங்கள் தெரிகின்றன. அந்த வசனங்களும் பெருங் கற்காலப் பண்பாட்டு ஈமக் கல்லறைகளில் உள்ளனவாகும்.**

**பட்டுள்ளன. நாகர் வழமையாகப் பயன்படுத்திய பொருள்களில் மணிணாகன், மணிணாகன் பள்ளி என்ற பெயர்களும் மூன்று தலைமுறை வேளிர்களின் பெயர்களைக் குறிக்கும் இரு வசனங்களும் காணப்படுகின்றன. புத்தர் படிமம், புத்தர்பாதம், நீர்த்தொட்டி, நீரேந்து கலன்கள் ஆகிய காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களில் அந்த வசனங்கள் அமைந்துள்ளமை கவனித்தற்குரியதாகும். அவை எல்லாவற்றிலும் 'ணாகன' என்னும் பெயர் காணப்படும்.**

**தூபியின் மேல் நுனிப்பாகமாக அமைந்த [illegible] என்பவற்றிலும் [illegible]பாக வழங்கப்**

பெற்ற தாதுப்பேழைகளிலும் மணிணாகன் என்ற பெயரைக் காணலாம். பாதுகாப்பாகப் பூட்டிவைக்கப்பட்டுள்ள கலவோடுகள் சிலவற்றிலும் செங்கட்டிகளிலும் மணிணாகன்பள்ளி என்ற பெயர் காணப்படுகின்றது. அவற்றுட் சிலவற்றிலே நாக வடிவம் தெரிகின்றது. இவற்றைப் பற்றி முதுநிலை ஆய்வாளர் எவரும் சென்ற நூற்றாண்டில் அறிந்திருக்கவில்லை என்பது பேராசிரியர் வேலுப்பிள்ளை எழுதிய குறிப்பொன்றினால் உணரப்படும். யாழ்ப்பாணத் தொல்பொருள் கழகத்தினரும் அறிந்துகொள்ளாதமை ஓர் அதிசயமாகும். புறநடையாகவுள்ள 'ததஹபத' என்று அரைகுறையாக அடையாளப்படுத்தக் கூடிய பிராகிருதச் சொல்லைப் பற்றியே பெரிதுபடுத்தி எழுதினார்கள். அதில் இறுதியாகவுள்ள பத என்பதே பிராகிருதம் என்று அடையாளப்படுத்தக் கூடியது, அது பாத்ர என்ற சமஸ்கிருதச் சொல்லின் பிராகிருத வடிவமாகும். அதற்கு முன்னொட்டாக அமைந்த சொல்லின் எழுத்துகள் தெளிவற்றவை. அவற்றை ததஹ என்று படித்தால் தத்தனுடைய பாத்திரம் என்றுதான் பொருள்கொள்ள நேரிடும். அவ்வாறாகில் ததஹ பத என்பது பிராகிரதம் என்ற விளக்கம் பொருத்தமற்றதாகி விடும்.

கந்தரோடையிலே காணப்படும் தூபி போன்ற கட்டுமானங்கள் சிலவற்றின் அடித்தளங்களில் தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதிய சிறிய வசனங்களின் அடையாளங்கள் தெரிகின்றன. அந்த வசனங்களும் பெருங்கற்காலப் பண்பாட்டு ஈமக் கல்லறைகளில் உள்ளனவாகும். இது வரை கவனித்தவற்றிலிருந்து கந்தரோடையிற் புராதன காலத்தில் நிலைபெற்ற பௌத்த நிறுவனங்கள் தமிழ் மொழி பேசும் நாகர் சமுதாயத்தின் சமய நிலையங்கள் என்பது உறுதியாகின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு என்பவற்றிலும் அதே நிலைதான் காணப்பட்டது.

வவுனியா அருங்காட்சியகம், சேருவில அருங்காட்சியகம் என்பவற்றிலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்கள் இந்தக் கருத்துக்கு ஆதாரமாகின்றன. வவுனியா அருங்காட்சியகத்தில் தமிழ் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் பெயர் எழுதிய பண்பாட்டுச் சின்னங்களைக் காணமுடியவில்லை. சேருவில அருங்காட்சியகத்தைப் பார்வையிடும்பொழுது ஏற்படும் அனுபவங்கள் அதிசயமானவை. அங்கு நின்ற கோலத்திலும் அமர்ந்த கோலத்திலுமுள்ள புத்தர் படிமங்கள் பல காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றுட் பல அளவிற் பெரியவை. சிற்பங்கள் என்ற வகையில் உன்னதமான வேலைப்பாடானவை. அவற்றில் மார்பகம், உதரம், நெற்றி ஆகியவற்றில் மணிணாகன் என்ற பெயர் தெளிவாகத் தெரிகின்றது. அது தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதப்பட்டுள்ளது. அவை தமிழ்மொழி பேசிய நாகரின் உன்னதமான வேலைப்பாடுகளாகும். கி.பி.2018 ஆம் ஆண்டளவில் அகழாய்வுகளின் மூலம் ஈரிடங்களிலே சேருவெலவிற் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் ஈமத்தலங்கள் இரண்டை அடையாளங் கண்டுள்ளனர்.

**(முற்றும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
24 டிசெம்பர் 2023



# கனடாவும் இனவழிப்பும்!

அ.நிக்ஸன்

புலம்பெயர் தேசங்களில் தமிழ்த் தேசியத்தை இலக்காகக் கொண்ட ஈழத்தமிழ் அமைப்புகளின் பலத்தை அறிந்த ஒரு பின்னணியிலேதான், சிங்கள அரசியல் தலைவர்கள் அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் குறிப்பிட்ட சில தமிழ் அமைப்புகளையும் தனிநபர் குழுக்களையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்பது பட்டவர்த்தனமாகியுள்ளது. ஈழத்தமிழர்கள் அனைவரும் இலங்கையின் ஒற்றையாட்சி அரச கட்டமைப்புக்குள் இணைந்து வாழத் தயார் என்ற பொய்யான பரப்புரையின் ஊடாக, கனடா போன்ற நாடுகளுக்குக் கணக்கைக் காண்பிக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது இலங்கை பொருளாதார ரீதியில் பலவீனமாகவுள்ளது. இன்று உலக நாடுகளிடம் பொருளாதாரப் பிச்சை எடுக்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதால், 2009 இல் போர் நடந்தபோது அமெரிக்க -இந்திய அரசுகளுடன் பேரம் பேசியது போன்ற ஒரு பலத்தை இலங்கை தற்போது இழந்துள்ளது.

பலம் இருந்தபோது இலங்கை எடுத்த நடவடிக்கைகள் தனி ரகமானவை. ஆனால் தற்போது பலவீனமான நிலையில் இலங்கையின் செயற்பாடுகள் மற்றொரு வகையாக மாறியுள்ளதை அவதானிக்க முடியும். குறிப்பாகத் தற்போது மாறிவரும் உலக அரசியல் ஒழுங்குக்கு ஏற்ப ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கையின் உள்ளக விவகாரமாக மற்றுவதே பிரதான இலக்கு. அதற்காக வடக்கு-கிழக்கு உள்ளிட்ட இலங்கைத் தீவின் பொருளாதார அபிவிருத்தி என்ற பொய்யான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளிடையே ஒற்றுமை இல்லாவிட்டாலும், அரசியல் விடுதலைக்குரிய தீர்வு விவகாரத்தில் ஒருமித்துச் செயற்பட வேண்டிய காலம் இது. கனடா போன்ற நாடுகளில் இருந்து அதற்குரிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கமுடியும். இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தப் பிரச்சினைக்கு "இரு அரசுகள்" என்பதுதான் தீர்வு என்று தற்போது உலகம் பேச ஆரம்பித்துள்ளது. அதேபோன்று ஈழத்தமிழர் விவகாரத்திலும் உலகில் மாற்றங்கள் வர ஆரம்பித்துள்ளன. ஆனால் இது பற்றித் தமிழ் அரசியல் கட்சிகளும் , அரசியல் ஆய்வாளர்கள் சிலரும் பேசுவதேயில்லை.

கனடாவில் காலிஸ்தான் தலைவர் படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் வல்லரசாகவுள்ள இந்தியாவுடன் கனடா முரண்பட்டது. இந்தியாவில் சீக்கிய மக்களுக்காகப் போராடும் காலிஸ்தான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மிகச் சிறிய குழுவினரே. சீக்கிய மக்களில் பெரும்பான்மையோர் இந்திய மத்திய அரசுடன் இணைந்தே வாழ்கின்றனர்.

ஆகவே கனடாவில் சிறிய புலம்பெயர் அமைப்பாக இயங்கிக் கொண்டிருந்த காலிஸ்தான் இயக்கத் தலைவர் படுகொலை செய்யப்பட்டமைக்காக, இந்தியாவோடு கனடா முரண்பட்டமையானது, கனடாவில் வாழும் சீக்கியப் புலம்பெயர் மக்களின் வாக்குகளுக்காகவே என்பது நன்கு தெரிந்த ஒன்று. கனடாவில் வாழும் தமிழர்கள் கனடாவில் உள்ள அரசியல் கட்சிகளுடன் இணைந்து கனடாவின் பிரதான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது மிக மிக அவசியமானது. கனடாவில் பூர்வீகமாக வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று தற்போது கனடா அரசு ஒப்புக்கொள்கிறது. அதற்காகப் பரிகாரம் தேடவும் கனடா ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் பின்புலத்தில் ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று கனடா கூறினாலும், கனடா அரசின் இலங்கை பற்றிய வெளியுறவுக் கொள்கையில் அந்த விடயம் பிரதிபலிப்பதில்லை.

பிரதமர் ஜஸ்ரின் ரூடோவை மையப்படுத்திய லிபரல் கட்சி வாக்கு அரசியலுக்காக அவ்வாறு கூறினாலும், 2006 இல் விடுதலைப்புலிகளுக்குக் கனடாவில் தடை விதித்தபோது பதவியில் இருந்த கொன்சர்வேட்டீவ் கட்சியும் ஈழத்தமிழர்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது இன அழிப்புத்தான் என்று தற்போது கூற ஆரம்பித்துள்ளது

வாக்கு அரசியலுக்காக இந்த இரு பிரதான அரசியல் கட்சிகளும் இன அழிப்பு என்று ஏட்டிக்குப் போட்டியாக மார்தட்டினாலும் அதனைச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டிய உத்தி புலம்பெயர் அமைப்புகளுக்குரியது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டாலும் அங்கு புலிகளின் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லப்படுவோர் ஒப்பீட்டளவில் பாதிக்கப்படுவதில்லை. இந்த நாடுகளில் அகதிக் கோரிக்கை அல்லது அரசியல் தஞ்சம் கோரும் ஈழத்தமிழர்கள் தங்களைப் புலிகள் அமைப்பின் போராளி அல்லது ஆதரவாளன் என்று கூறி பிரஜாவுரிமையைப் பெறமுடியும். ஆனால் புலி உறுப்பினர் அல்லது புலிகளின் ஆதரவாளன் என்று தெரிந்தாலே கனடாவில் அகதி அந்தஸ்து அல்லது அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்படும். இன்றுவரை கனடாவில் இவ்வாறுதான் நிலைமை உள்ளது. பிரித்தானிய அரசு புலிகளுக்குத் தடை விதித்திருந்தாலும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அங்கு தொடர்ந்தும் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால் கனடாவில் அவ்வாறானதொரு சூழல் இன்றுவரையும் இல்லை.

ஆகவே பிரித்தானியாவும் அமெரிக்காவும் அரசியலுக்காகப் புலிகளைத் தடை செய்தனவே தவிர, புலிகளை இந்த நாடுகள் உண்மையான பயங்கரவாதிகளாகக் கருதவில்லை. இதனை பராக் ஒபமா, கிளாரி கிளிங்டன் போன்ற தலைவர்களின் பேச்சுகளில் இருந்தே அறிய முடியும். இந்த நிலையில் ஈழத்தமிழர்களுடன் இவ்வளவு கடுமையாக இயங்கிய கனடா ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது எதற்காக? என்று அங்கு வாழும் சிங்களப் புலம்பெயர் மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர். ஆனால் கனடாவில் சிங்கள மக்கள் மிகக் குறைந்தளவிலேயே வாழ்கின்றனர். அப்படியிருந்தும் கனடாவைத் தொடர்ந்தும் இலங்கையின் பக்கம் வைத்திருக்கும் செயற்பாடுகளைச் சிங்களப் புலம்பெயர் அமைப்புகள் தீவிரப்படுத்தி யுள்ளன. மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது 2013 இல் இலங்கையில் சொக்கோம் மாநாடு நடைபெறுவதற்குரிய அத்தனை ஒத்துழைப்புகளையும் கனடா அரசு வழங்கியிருந்து. சில ஐரோப்பிய நாடுகள் சொக்கோம் எனப்படும் 23 ஆவது பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதை அப்போது கண்டித்திருந்தன. 2009 முள்ளிவாய்க்கால் போரில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் பற்றி இலங்கை பொறுப்புக் கூறவில்லை என்று சுட்டிக்காட்டியே சில ஐரோப்பிய நாடுகள் அன்று எதிர்ப்பு வெளியிட்டிருந்தன.

ஆனால் ஜஸ்ரின் றூடோ தலைமையிலான தொழிற் கட்சி ஆட்சிக்கு வந்ததும் கனடாவில் ஈழத்தமிழர் பற்றிய நிலைமை மாறியுள்ளது. அடுத்த ஆண்டு கனடாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் தற்போது கொன்சர்வேட்டீவ் கட்சியின் தலைவரும் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூற ஆரம்பித்துள்ளார்.

இது வாக்கு அரசியல் என்று தெரிந்தாலும் இலங்கை தொடர்பான கனடா அரசின் வெளியுறவுக் கொள்கையில் இன அழிப்பு என்பதைச் சேர்ப்பதற்குரிய செயலில் ஈடுபட வேண்டிய பொறுப்பு புலம்பெயர் அமைப்புகளுக்குரியது. மியான்மர் நாட்டில் ரோஹிங்யா முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள்ளாகின்றமை தொடர்பாக ஆபிரிக்க நாடொன்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது. அதனை மியான்மர் அரசு எதிர்த்திருந்தது.

ஆனால் எந்த ஒரு நாட்டில் இன அழிப்பு நடந்தாலும் அதற்கு எதிராக மற்றுமொரு நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்ய முடியுமென நீதிபதிகள் தமது விளக்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆகவே கனடாவில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கனடா அரசின் இலங்கை பற்றிய கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும் அளவுக்குப் புலம்பெயர் தமிழர்கள் செயலாற்ற வேண்டும். கனடா மூலமாகவே சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவும் முடியும்.

இந்தக் காரண காரியங்களினால் ஈழத் தமிழர்கள் தொடர்பான விடயத்தில் கனடாவின் போக்கில் மாற்றம் இருப்பதை அறிந்தே கனடாவில் இயங்கும் தமிழ்க் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் சில உறுப்பினர்களையும் வேறு சில தனிநபர்களையும், இலங்கை விலைக்கு வாங்கி அவர்கள் தங்கள் பக்கம் நிற்பதுபோல கனடா அரசுக்குக் கணக்குக் காட்ட முனைகிறது. அதாவது ஈழத்தமிழர்களின் பல பொது அமைப்புகள் இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புடன் இணக்க அரசியலுக்குச் சம்மதித்துள்ள நிலையில் தமிழ் இன அழிப்பு என்று பேச வேண்டிய அவசியம் இல்லையெனக் கனடா அரசுக்கும் கனடாவிலுள்ள [illegible] பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இலங்கை பாடம் கற்பிக்க முற்படுகின்றது. கனடா அரசு ஈழத்தமிழர்களின் நியாயப்பாட்டை ஏற்றுள்ளது என்பது பற்றித் தற்போது ஜனாதிபதி ரணில், புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட, பேராசிரியர் ரொஹான் குணசேகர, ஆகியோர் நன்கு புரிந்துள்ளனர். இதன் காரணமாகவே தமக்குச் சாதகமான சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் ஊடாக இமாலயப் பிரகடனம் போன்று மேலும் பல திட்டங்களை இலங்கை வகுத்து வருகின்றது.

கனடா தமிழ்க் காங்கிரஸின் சில உறுப்பினர்கள் உலகத் தமிழர் பேரவையின் இமாலயப் பிரகடனத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினாலும், தமிழ்க் காங்கிரஸின் மற்றுமொரு முக்கியமான உறுப்பினரான கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி, இமாலயப் பிரகடனத்தை நிராகரித்துள்ளார். தமிழர் தாயகத்தில் வாழும் அவருடைய தந்தையான ஆனந்த சங்கரியும் நிராகரித்துள்ளார். இந்த நிலையில் சுரேன் சுரேந்திரன் என்பவர் மஹிந்த ராஜபக்சவையும் சந்தித்து இமாலயப் பிரகடனத்துக்கு ஆதரவு கோரியிருக்கிறார்.

ஆகவே சிங்கள அரசியல் தலைவர்கள் அவசர அவசரமாக இலங்கையின் பொருளாதார பலவீனங்களுக்கு மத்தியிலும் கனடா போன்ற மேற்கு நாடுகளை மயக்கி, மீண்டும் இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குரிய சாதகமான அரசியல் சூழலை உருவாக்க முற்படுவதன் விளைவுகள்தான் இந்த இமாலயப் பிரகடனம் என்பது தெளிவாகியுள்ளது.

கனடா பேசுகின்ற இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணைக்குரிய ஆவணங்களைத் தயார்ப்படுத்தல் போன்ற எந்த ஒரு வேலைத் திட்டங்கள் குறித்தும் தமிழ்த்தேசியக் கட்சிகள் சிந்திப்பதாக இல்லை. இன அழிப்புத்தான் என்று கனடாவின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் பகிரங்கமாகக் கூற ஆரம்பித்துள்ள பின்னணியில் கனடாவில் புலிகள் மீதான தடையை நீக்குமாறு இதுவரை தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரவுமில்லை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குக் கனடா பல வருடங்களாகத் தடை விதித்திருக்கின்றது. ஆனால் கனடா செல்வதற்குத் தன் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கோரவில்லை.

இன அழிப்புப் பற்றிக் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் தாருங்கள் என்று கஜேந்திரகுமார் இதுவரையும் கனடா அரசிடம் கோரவுமில்லை. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் கனடா தடை விதித்திருக்கின்றது. ஆனால் 2001 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் புலிகளுடன் ஏற்பட்ட புரிதல் பற்றிய விளக்கங்களைக் கொடுத்து, தன் மீது கனடா விதித்த தடையை நீக்குவதற்குரிய வேலைத் திட்டங்களில் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஈடுபடவில்லை.

ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்புத்தான் என்று கனடாவின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் கூறுகின்றது என்றால், இந்த இருவருக்கும் விதிக்கப்பட்ட தடையைக் கனடா தொடர வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையையும் நீக்க வேண்டுமல்லவா? துவாரகா என்ற பெயரில் போலியாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக தேவையற்ற ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கும் சில தமிழ் ஊடகங்கள் இது பற்றி ஆய்வு செய்வதில்லை.

கனடாவின் சமகாலப்போக்கைப் பயன்படுத்திக் கனடா அரசின் ஊடாக இன அழிப்பு என்பதைச் சர்வதேச நீதிமன்றம் வரை கொண்டு செல்லக்கூடிய வழிமுறைகள் பற்றி ஆராயவும் சில தமிழ் ஊடகங்கள் தவறுகின்றன. ஆனால் தமிழர்களுக்குச் சாதகமான கனடாவின் தற்போதைய போக்கைப் புரிந்து கொண்டு இமாலயப் பிரகடனம் போன்ற பொய்யான நல்லிணக்கப் பொறிகள் மூலமாகச் சிங்கள அரசியல் தலைவர்கள் காய் நகர்த்துகின்றனர்.

குறிப்பாக இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஈழத்தமிழ் புலம்பெயர் அமைப்புகள் ஏற்றுக் கொண்டுள்ளன என்பதைக் காண்பிக்க ஆங்கில மொழியில் காணொலிக் காட்சி ஒன்றை இலங்கை தயாரித்து வெளியிட்டுள்ளது. இன அழிப்பு என்பதை கனடா தனது இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் இணைப்பதற்கு முன்னர் இலங்கை கனடா அரசை தமக்குரியதாக மாற்றும் உத்திகளை வகுத்து வருகின்றது. அதற்கேற்ப கனடாவில் மட்டுமல்லாது புலம்பெயர் தேசமெங்கும் இந்தக் காணொலியை இலங்கை கொண்டு செல்லவுள்ளது. உக்ரைன்- ரஷ்யப் போரினாலேயே கனடா இந்தியாவுடன் முரண்பட்டது. கனடாவில் வாழும் சீக்கியர்கள் [illegible]ட்டமிட்டு இந்தியாவுக்கு எதிராகக் கனடாவைப் பயன்படுத்தின[illegible]. மிகப் பெரிய நாடான இந்தியாவுடன் கனடாவைச் சீக்கியர்கள் முரண்பட வைத்தனர் என்றால், ஈழத்தமிழர் விவகாரத்தில் மிகச் சிறிய நாடான இலங்கையைக் கனடா முற்றாகப் புறக்கணிப்பதற்குரிய உத்திகளை புலம்பெயர் தமிழ் அமைப்புகளினால் ஏன் கையாள முடியாதுள்ளது?

புலம்பெயர் அமைப்பு என்ற போர்வையில் வெள்ளை வேட்டிகளுடன் இலங்கையில் மகாநாயக்கத் தேரர்களைச் சந்தித்து இமாலயப் பிரகடனத்தைக் கையளித்த உலகத் தமிழர் பேரவை என்ற தனிநபர் குழுக்கள், மாறி வரும் உலக அரசியல் ஒழுங்கில் ஈழத்தமிழர் விவகாரத்தில் எழக்கூடிய சாதகமான விளைவுகளைக் கருவறுக்கின்றன என்பது மட்டும் இங்கே தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கைவண்ணம்



பி.அபிராமி
தரம் - 4
உடுவில் மகளிர் கல்லூரி




ஜெ. யதுசன்
தரம் - 9
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்




ஆத்மிகா
தரம் - 6
யா/திரேசா மகளிர் கல்லூரி



சி.பிரவின் ,
தரம் - 11 ,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி



அ.நிதுஷனா
தரம் - 7 F
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



ஹ.பவிஷனா,
தரம் - 2
யா/புனித பொஸ்கோ கல்லூரி

# மாளிகைக் கிராமம்:

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவிடயம் தொடர்பான கதைகள் மூதாதையர்களினால் செவிவழியாக கடத்தப்பட்டு வந்துள்ளது. அதற்குக் கட்டியம் கூறுவதுபோல கற்தூண்கள் பல அங்கு காணப்படுகின்றது. அத்துடன் தான்தோன்றி சிவலிங்கம் ஒன்றும் செவ்வகவடிவிலான கருங்கற்பீடங்களும் யானைத்தலைவாசல் அமைவுடைய கருங்கற்பொழிவுகளும் சேதமடைந்தநிலையில் உள்ளன. இந்தத் தொல்பொருள் பகுதியினை மையப்படுத்தி, விநாயகரை தமது குலதெய்வமாக ஊர்மக்கள் வழிபட்டுவருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் வன்னிக்கிராமங்களில் 'யாக்காடு வெட்டுதல்'எனும் வழக்கம் இருந்துள்ளது. குறிப்பாக யானைகள் மற்றும் காட்டுவிலங்குகளிடமிருந்து மக்களும் விவசாயநிலங்களும் பாதுகாப்பாக இருப்பதற்காகக் குடியிருக்கும் காணிகளுக்கு அருகில்உள்ள காடுகள் வெட்டப்படும். இதுவே 'யாக்காடு வெட்டுதல்' என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறு வெட்டும்போதே இந்தத்தொல்பொருள் பகுதி வெளிப்பட்டதாக பூர்வக்குடிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காட்டுவிநாயகர் ஆலயம் தொடர்பான குறிப்புகள் யே.பி.லூயிஸின் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு வெளிப்பட்டுள்ள கற்தூண்கள் கி.பி.2ஆம் 3ஆம் நூற்றாண்டுகளுக்குரியதாக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு யாத்திரையாக வருகைதந்த சமயத்துறவிகள் கொண்டகுழு மாளிகைப்பகுதியில் சிலகாலம் தங்கிநின்று இளைப்பாறிவிட்டு பின்னர் தென்பகுதிநோக்கிச் சென்றுள்ளதாக குறிப்புகள் உள்ளன. அவர்கள் தங்கிநின்றபகுதி இந்தத்தொல்பொருள் பிரதேசமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதனைச் சில ஆய்வாளர்களும் உறுதிப்படுத்துகின்றனர். அந்தவகையில் இந்தப்பிரதேசம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதேவேளை குறித்தபகுதி புராதனஇடமாக இருப்பதனால் அங்கு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசினால் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் இயற்கைமுறையிலான வழிபாட்டம்சங்களைப் பின்பற்றி, மக்கள் தமது பிரார்த்தனைகளை முன்னெடுக்கின்றனர். இதேவேளை ஆலயத்தைப் புனரமைப்பதற்காக பலமுறை கிராம மக்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. அங்கு ஆலயம் அமைக்கும் பணிகளை மேற்கொண்டால் கிராமத்துக்கு ஆபத்து ஏதேனும் உருவாகலாம் என்ற அச்ச மனோநிலையும் மக்கள்மத்தியில் உள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

### புதிர்ப்பொங்கல்

காட்டுவிநாயகருக்கு புதிர்எடுத்துப் பொங்கும் பாரம்பரிய வழக்கம் கிராமத்தில் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்பட்ட பின்னர், புதிர்நெல்லை எடுத்து தை மாதத்தில் விசேடபூசைகள் செய்து பொங்கல் பொங்கி வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது ஊர்மக்கள் அனைவரையும் ஆலயத்தில் காணமுடியும். சமநேரத்தில் மாளிகைக்குளத்துக்கு அண்மையில் உள்ள காட்டுப்பகுதியில் அமைந்துள்ள ஐயனாருக்கும் மடைகள் செய்து படையல் மேற்கொள்ளப்படுகின்றது. இதே படையல். பொங்கல் என்பன நெல்விதைப்பினை மேற்கொண்ட பின்னரும் செய்யப்படுகின்றன. காட்டுவிநாயகர், ஐயனார் ஆகியதெய்வங்கள் மீது ஊர்மக்கள் மிகுந்தநம்பிக்கை கொண்டுள்ளனர். இந்தத் தெய்வங்களே விவசாயஅழிவுகளில் இருந்து தம்மைப் பாதுகாப்பதாக மக்கள் நம்புகின்றனர். அதற்கு உதாரணமாக 40 வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்றையும் இவ்வூர் மக்கள் சொல்கின்றனர்.

ஒருமுறை மாளிகைக்குளத்தில் நீர் முற்றாக வற்றி, கடும் வறட்சி ஊரை வாட்டியது. இதனால் நெற்பயிர்கள் அழிவடையும்நிலை ஏற்பட்டது. இதனையடுத்து காட்டுவிநாயகருக்கு குடநீர் ஊற்றி மண்டபப்படி ஒன்றை ஊர்மக்கள் செய்துகொண்டிருந்தபோதே, மழைபொழிந்து வறட்சியைப் போக்கி, பயிர்களைக் காத்தது. இதுதான் அந்தச் சம்பவம். இதன் பின்னர் இந்தப்பாரம்பரிய வழக்கம் கிராமமக்களால் தொடர்ந்து பேணப்பட்டுவருகின்றது. ஆலயத்தில் பூசை வழிபாடு பரம்பரைவழியான பூசாரியார் ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## காட்டு விநாயகர் ஆலயமும் பறிபோகுமா?

நீண்டகாலமாக குறித்த ஆலயவளாகம் புனரமைக்கப்படவில்லை என்ற அதிருப்திநிலை மக்கள் மத்தியில் ஆறாவடுவாக இருந்துள்ளது. இதனையடுத்து கடந்த 2019ஆம் ஆண்டு கிராமமக்களின் ஆதரவுடன் ஆலயவளாகத்தினை துப்புரவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை அறிந்துகொண்ட தொல்பொருள் திணைக்களம் புராதனச்சின்னங்களைச் சேதப்படுத்தியதாகத் தெரிவித்து ஓமந்தை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவுசெய்திருந்தது. அதற்கமைய நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், ஆலயநிர்வாகத்தினர் உட்பட மூன்றுபேரை கைதுசெய்து வவுனியாநீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். குற்றத்தை ஒப்புக்கொண்ட காரணத்தினால் அவர்களுக்குத் தண்டப்பணம் அறவிடப்பட்டு நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின்னர் குறித்த ஆலயம் புதர்மண்டி கிடப்பதுடன் எந்தவித அபிவிருத்திப்பணிகளும் செய்யப்படவில்லை. வழிபாடுகள் மாத்திரம் இடம்பெற்றுவருகின்றன. வடக்கு - கிழக்கில் தொல்பொருள் திணைக்களமூடாக பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை பேரினவாதஅரசு தீவிரமாக முன்னெடுத்துவருகின்றது. முல்லைத்தீவின் குருந்தூர்மலை அபகரிக்கப்பட்டு பௌத்தவிகாரை அமைக்கப்பட்டுள்ளது. வெடுக்குநாறிமலையை அபகரிப்பதற்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன. அதன் நீட்சியாக மாளிகை காட்டுவிநாயகர் ஆலயமும் அபகரிக்கப்படும் அபாயநிலை எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.வி.தவராசா






# நீதிக்கான நெடும்பயணம்

### பாணந்துறை மேல்நீதிமன்றில் விசாரணை

இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய.பாணந்துறை மேல் நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமையினால் இந்த வழக்கும் பாணந்துறை மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் எதிரியின் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி பாணந்துறை வந்து இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு பாதுகாப்புக் காரணங்களினாலும் சில தனிப்பட்ட காரணங்களினாலும் பின்வாங்கினர். அதனால் தனிமையில் சென்று பாணந்துறை மேல்நீதிமன்றத்தில் ஆறு மாதங்கள் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது.

இந்த வழக்கில் தொடர்ந்து அரசு தரப்பினால் சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த கல்கமுவ தனது சாட்சியத்தில் தான் எதிரி தங்கியிருந்த மாடிவீட்டைச் சோதனையிட்டபொழுது அங்கு கைக்குண்டு, ரவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் மேலும் எதிரிகள் சதித்திட்டம் தீட்டிய இரகசியத் தகவல்களும் வரைபடங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் சாட்சியமளித்தார். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரியான நிஸங்கவின் சாட்சியமும் அரச தரப்பால் நெறிப்படுத்தப்பட்டது.

அரசதரப்புச் சாட்சிகள் என்னால் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் அரச தரப்புச் சட்டத்தரணி புவனேக அலுவிகார (தற்பொழுது புவனேக அலுவிகார உயர் நீதிமன்ற நீதியரசராவார்) சாட்சிகளை மறு விசாரணை செய்ததுடன் சட்டமருத்துவப் பரிசோதனை அறிக்கைகளையும் பிரேத பரிசோதனை அறிக்கைகளையும் நீதிமன்றில் சமர்ப்பித்து அரச தரப்பு வழக்கை முடித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து அரச தரப்பும் எதிரி சார்பிலும் எழுத்து மூலமான சமர்ப்பணத்தை நீதிமன்றுக்குச் சமர்ப்பித்ததும் தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### ஏழு வருட கடும்காவல் தண்டனை

மேல் நீதிமன்ற நீதிபதி வீரசூரிய தனது தீர்ப்பில் 1993.11.19 எதிராளி மரியதாசினால் சுயவிருப்பத்தின் பேரில் வழங்கப்பட்டதாக நீதிமன்றினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் தன்னார்வத் தன்மையிலும்,மற்றைய சான்றுகளின் அடிப்படையிலும் இந்த வழக்கின் எதிரியான மரியதாஸுக்கு எதிராக அரச தரப்பினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், ஏழு வருட கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

### மேன்முறையீடு

மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கிய இந்தத் தீர்ப்புக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கர் தவராசாவால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு 1994 ஆரம்பத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு டிசெம்பர் 18இல் முடிவடைந்தது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான எக்டா யாப்பா, குணசேகர ஆகியோரால் இந்த வழக்கின் தீர்ப்பு 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி வழங்கப்பட்டது. தீர்ப்பில் எதிரியாகிய மரியதாஸ் விடுதலை செய்யப்பட்டார்.

**நீதியரசர் குழாமில் அங்கம் வகித்த நீதியரசர்களான குணசேகர, எக்டர் யாபா ஆகியோரது தீர்ப்பு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் மிக முக்கியமான தீர்ப்பாக அமைந்தது.**

Mariadas Vs The State (1995) SLR> **எதிரியினால் வழங்கப்பட்டதான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்படவில்லையெனவும் பல சட்ட நடைமுறைக் குறைபாடுகள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்த நீதியரசர்கள், மேல் நீதிமன்றில் விசாரணை முடிவில் எதிரி தரப்பினரால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்படவில்லையென முன்வைக்கப்பட்ட சகல ஆட்சேபனைகளையும் கவனத்தில் எடுத்து தமது தீர்ப்பில் அதனைப் பதிவு செய்துள்ளனர். அரசினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல்செய்யப்பட்ட பல வழக்குகளில் அரசியல் கைதிகள் விடுதலையாவதற்கு இந்த முக்கியமான தீர்ப்புக் காரணமாக அமைந்தது.**

### சாட்சிகளின் வாக்குமூலங்கள்

கொலை நடந்த இடமான புல்லர்ஸ்லேன் 410/27 இலக்கத்தைக் கொண்ட வீட்டில் கொலை நடந்த நேரத்தில் அதாவது 1307-1989 அன்று மாலை 7மணி 35 நிமிடமளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற வேளையில் நேரடியாகக் கண்கண்ட சாட்சியாகயிருந்த முருகேசு சிவசிதம்பரம், சம்பவம் நடந்த இடத்தில் தங்கியிருந்த மற்றைய சாட்சிகளான திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா, திருமதி யோகேஸ்வரன், மெய்ப்பாதுகாவலர்களான வேலுப்பிள்ளை லெச்சுமணன், நாராயணசாமி, சத்தியமூர்த்தி, ஆராச்சிலாகே நிசங்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர் தம்பிராஜா கந்தசாமி ஆகியோரின் வாக்குமூலங்கள் பொலிஸாரினால் பதியப்பட்டிருந்தன. இந்தச் சாட்சிகள் தங்களது பொலிஸ் வாக்குமூலத்தில் மிகத் தெளிவாக நடந்த சம்பவத்தை விளக்கியுள்ளனர்.

**சத்தியமூர்த்தியின் சாட்சி**
**( வாசல் பாதுகாப்புக் கடமை புரிந்தவர்)**

சம்பவம் நடந்த அன்று மாலை 6 மணி 45 நிமிடம் அளவில் ஒரு மஞ்சள் நிற வாடகைக்கார் பிரதான நுழை வாசலின் (Main gate) முன் வந்து நின்றது. அதிலிருந்து மூன்று இளைஞர்கள் இறங்கி வந்து பிரதான வாசல் வழியாக வீட்டினுள் பிரவேசிக்க முற்பட்டனர். பாதுகாப்புக் கடமையிலிருந்த நான் அம்மூவரினதும் அடையாளத்தைப் பரிசோதனை செய்ய எத்தனித்தேன். அப்போது வீட்டின் மேல்மாடியின் வராந்தாவில் நின்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அம்மூவரையும் எந்தவித சோதனையும் இன்றி உள்ளே அனுமதிக்கும்படி கூறினார். அதையடுத்து மூன்று இளைஞர்களும் எந்தவித சோதனைக்கும் உட்படுத்தப்படாமல் வீட்டுக்குள் செல்ல அனுமதித்தேன்.

**வேலுப்பிள்ளை லெட்சுமணனின் சாட்சி**
**( பாதுகாப்பு உத்தியோகத்தர்)**

**அந்த இளைஞர்கள் மூவரையும் எந்தவிதச் சோதனையும் செய்வதற்கு முன்பே யோகேஸ்வரன் அவர்களை நோக்கி வாங்கோ வாங்கோ (Come,Come) என்று கூறி உள்ளே அழைத்தார். யோகேஸ்வரனைச் சந்திக்க வருபவர்களை எந்தவித பாதுகாப்புப் பரிசோதனையும் செய்யக் கூடாதென்று எங்களுக்கு அவர் ஏற்கனவே கடுமையான உத்தரவு வழங்கியிருந்தார். அதனால் யோகேஸ்வரனைக் காண வருபவர்களிடம் அடையாள அட்டையை மட்டும் பார்த்துப் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு எந்தவித உடல் ரீதியான சோதனையுமின்றி உள்ளே அனுமதிப்போம். அதையே அன்றும் செய்தோம்.**

**தாங்கள் வந்தவர்களைச் சோதிக்க முற்பட்டபோது யோகேஸ்வரன் சோதிக்க வேண்டாம் என்று மேல்மாடியில் நின்று கூப்பிட்டு வந்தவர்களை மேல் மாடிக்கு** அழைத்துச் சென்றுவிட்டதாக பாதுகாப்பு உத்தியோத்தர்கள் மாவை சேனாதிராஜாவிடமும் கூறியுள்ளனர். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரிடமிருந்து தங்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களோ உத்தரவுகளோ வழங்கப்படாததால் அவர்களைச் சந்திக்க வருபவர்களை தாங்கள் முற்றுமுழுதாக சோதனையிட்ட பின்பே உட்செல்ல அனுமதிப்பதாகவும் பாதுகாப்பு உத்தியோகத்தர் கூறியுள்ளார்.



மேலும் இந்தச் சம்பவம் நடைபெற்ற தினமான 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் பதிவுப் புத்தகத்தின்படி இந்த மூன்று துப்பாக்கிதாரர்களின் ஒருவரான அலோசியஸ் 06.07.1989, 07.07.1989, 11.07.1989 ஆகிய மூன்று தினங்களிலும் யோகேஸ்வரனைப் பார்ப்பதற்கென இந்த வீட்டுக்கு வருகை தந்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.07.1989 அன்று வீட்டின் உட்பகுதிக்கு வந்த மூவரில் இருவர் மேல்மாடி நோக்கிச் சென்றுள்ளனர். ஒருவர் கீழ்மாடியில் தங்கியுள்ளார். அமிர்தலிங்கத்தைப் பார்க்க வேண்டுமென மூன்று இளைஞர்கள் வந்துள்ள விடயம் தெரியப்படுத்தப்பட்ட பொழுது , அமிர்தலிங்கம் வந்தவர்களைக் காண மேல்மாடி நோக்கிச் சென்றுள்ளார். அப்போது சேனாதிராஜாவிடம் "மூன்று இளைஞர்கள் என்னைப் பார்க்க வந்துள்ளார்கள். நான் கொழும்பு தாஜ்ஹோட்டலில் இந்திய இராஜதந்திரியின் விருந்துக்கு செல்லவேண்டும் என்று அமிர்தலிங்கம் கூறினார். அதற்கு மாவை சேனாதிராஜா நீங்கள் சென்று பேசுங்கள் என்று பதிலளித்துள்ளார். வந்தவர்கள் யோகேஸ்வரன், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரைச் சந்திக்க வந்தமையால் மாவை சேனாதிராஜா இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளையில் அமிர்தலிங்கத்தின் மகன் மருத்துவர் காண்டீபனிடமிருந்து தொலைபேசி அழைப்பும் லண்டனில் இருந்து வந்துள்ளது. அமிர்தலிங்கத்தின் துணைவி மங்கையற்கரசி தனது கணவரிடம் மகனின் தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாகவும் மகனிடம் உரையாடும்படியும் கூறியுள்ளார். ஆனால் தன்னைக் காணச் சில முக்கியமான பிரமுகர்கள் வந்துள்ளனர். அவர்களைச் சந்தித்து விட்டு மிக விரைவில் கதைக்கிறேன் என்று சொல்லிவிட்டு அமிர்தலிங்கம், தன்னிடம் வந்திருந்த இளைஞர்களைக் காண மேல் மாடி நோக்கிச் சென்றிருக்கிறார்.

**அவ்வேளையில் யார் தனது கணவரைக் காண வந்துள்ளார்கள் என்பதை மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அறிந்திருக்கவில்லை. ஆகவே தனது கணவரைக் காணவந்தவர்களை சோதனை செய்த பின்னரா உட்செல்ல அனுமதித்தீர்கள்? என அவர் பாதுகாப்பு அதிகாரிகளைக் கேட்டுள்ளார். அதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 'அவர்கள் யோகேஸ்வரனைப் பார்க்க வந்தவர்கள். அதனால் அவர்களைப் பரிசோதனை செய்ய முடியவில்லை' என்று நடந்ததைக் கூறியுள்ளனர்.**

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 2



## உணர்ந்தினம்

○ இராகவன்

நவரத்தினம் மாஸ்ரர் ஒரு நல்ல பாடகர் எண்டு போன கிழமை சொல்லியிருந்தனான். அவர் மட்டுமில்லை அவரின்ர மகள் ஜெயபாரதியும் நல்ல பாடகிதான். அவ இப்ப பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில மியூசிக் ரீச்சராயிருக்கிறா. 1990 களில ஜெயபாரதி ஒரு நட்சத்திரப் பாடகியாயிருந்தவா.

மற்றது நான் ஏற்கனவே குமாரசுவாமி மாஸ்ரரைப் பற்றிச் சொல்லேக்குள்ள 'மூத்த விநாயகர் திருப்பதிகம்' என்ற ஒலிநாடாவைப் பற்றிச் சொல்லியிருக்கிறன். அந்த ஒலி நாடாவில ஜெயபாரதி ரீச்சர் 'கருணைக்கடலே...' என்று தொடங்கும் பாடலைப் பாடியிருக்கிறா. இது அந்தக் காலத்தில வலுபேமஸ். இந்தப் பாட்டுத்தான் எண்டில்லை ஜெயபாரதி ரீச்சர் வேற வேற ஒலிநாடாக்களிலயும் கனபாட்டுகள் பாடியிருக்கிறா. அவவின்ர குரல் தனித்துவமாயிருக்கும். அவவின்ர பேட்டியொண்டு கொஞ்சக் காலத்துக்கு முந்தி பேப்பரிலயும் வந்திருக்கு. நீங்கள் அநேகமா வாசிச்சிருப்பியள். அதில அவ கனக்க விசயங்களைச் சொல்லியிருக்கிறா.

18


ஜெயபாரதி

நாங்கள் எங்கட வாழ்நாளில சந்திக்கிற ஆக்களில சிலர் இப்படித்தான் நல்ல வித்துவத்தோட அலட்டிக்கொள்ளாமல் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளுறதில ஆர்வமோ முனைப்போ காட்டாமல் தன்னடக்கத்தோட வலு பக்குவமாயிருக்கினம். அவையளப் பாத்து நாங்களும் சில விசயங்களைக் கற்றுக்கொள்ளவேணும். தன்னடக்கத்தையும் பக்குவத்தையும் வளர்த்துக் கொள்ள வேணும்.

நவரத்தினம் மாஸ்ரரைப் பற்றிச் சொல்ல வெளிக்கிட்டு இவ்வளவு விசயத்தையும் சொல்ல வேண்டி வந்திட்டுது. இதோட நாங்கள் 'மோட்டச்சைக்கிள் நவரத்தினம்' எண்டு ஏயெம் ஜெயரத்தினம் மாஸ்ரர் சொன்ன லொஜிக் நவத்தைப் பற்றி அடுத்த கிழமை பாப்பம்.

(தொடரும்)




J.p.சந்திரபாபு

# வாழ்வைக் கொண்டாடத் தெரியாதவன்

○ கோகுலராகவன்

J.p.சந்திரபாபு.

சினிமாக் கலையை நன்றாகக் கையாண்ட நடிகர்களில் முக்கியமானவர்.

பாடி, ஆடி நடிக்க கைவந்த கலைஞராக தமிழ்ச் சினிமாவில் இருந்த நகைச்சுவை நடிகர்களில் என். எஸ். கிருஷ்ணனுக்குப் பிறகு சந்திரபாபு வலம் வந்தார். மேலைத்தேய நடனம் ஆடுவார். பின்னர் சென்னைத் தமிழ் பேசி நடிப்பார். இதுவே அவரது சிறப்பு.

ஒரு காலத்தின் நகைச்சுவை நடிகராக கொடி கட்டிப்பறந்தவர்.

சார்லி சாப்ளின் சாயலில் இருப்பார். ஆனால் அவரை பின்பற்றிச்சந்திரபாபு நடிக்கவில்லை எனத்தோன்றுகிறது. ஆனால் நாகேஷ் அநேகமாக சார்லி சாப்ளின் பாணியைப் பின்பற்றியவர். தூய செந்தமிழில் இருந்த சினிமா மொழியை சென்னைவட்டார பேச்சுவழக்கில் தமிழ்ச் சினிமாவுக்குள் கொண்டு வந்தவர் சந்திரபாபுதான்.




"கழுதை" என்பதை "கய்தே" என வெள்ளித்திரையில் துணிந்து சொன்னவர். 1958 இல் வெளிவந்த "சபாஸ் மீனா" படத்தில் கிட்டத்தட்ட சந்திரபாபு தான் நாயகன். இரு வேடங்கள். இவருக்கு ஜோடி சரோஜாதேவி.

சிவாஜி இரண்டாம் நாயகன்தான். அவருக்கு ஜோடி நட்சத்திர அந்தஸ்து இல்லாத மாலினி என்ற நடிகை. சிவாஜியை விட ஒரு ரூபா சம்பளம் அதிகமாக வாங்கினார்அப்படி ஒரு கிறுக்கு அவருக்கு.

நகைச்சுவை வேடமாக இருந்தாலும் சந்திரபாபுவுக்கு ஒரு பாடல், அல்லது நாயகியோடு ஒரு பாடல் கட்டாயம் படத்தில் இருக்கும். இது அவருக்கான சிறப்பு.

பேச்சில் சென்னைத்தமிழைப் புகுத்தியது போல் நடனத்தில் மேலைத்தேய நடனப் பாணியான 'யாட்லிங்' முறையைப் புகுத்தியவர்.

இவர் நடனம் ஆடும் பாணி தனியாக மாறுபட்டதாக இருக்கும். சந்திரபாபு பாடிய பாடல்கள் சாகா வரம்பெற்றவை.

1957 இல் 'மணமகன் தேவை' திரைப்படத்தில் இசைமேதை ஜி. இராமநாதன் இசையில் சந்திரபாபு பாடிய "பம்பரக்கண்ணாலே காதல் சங்கதி சொன்னாளே" பாடல் மிகப்பிரபலம்.

இது "கந்தசாமி"திரைப்படத்தில் மீளுருவாக்கம் செய்யும் அளவுக்குக் காலத்தால் அழியாத பாடல்.

1962 இல் அன்னை திரைப்படத்தில் "புத்தியுள்ள மனிதரெல்லாம்" என்ற பாடல் தத்துவமும் நகைச்சுவையும் கலந்து ஒலித்தது. இப்பாட்டில் நடப்பதையே நடனமாகச் செய்வார். இதே அன்னை படத்தில் எலி அடிக்கும் காட்சி ஒன்றில் சந்திரபாபு நகைச்சுவையில் பின்னி எடுத்திருப்பார்.

மரகதம் படத்தில் "குங்குமப்பூவே கொஞ்சும் புறாவே." என்ற பாடலை கே. ஜமுனாராணியுடன் எஸ். எம். சுப்பையா நாயுடு இசையில் பாடி இருப்பார்.

சந்திரபாவுவை அவரது நாயக பிம்பம் அல்லது நாயகனாக நடிக்கவேண்டும் என்ற ஆசை வாய்ப்புகளைத் தடுக்கத் தொடங்கியது.

கண்ணதாசன் இவரை முதன்மைப் கதாபாத்திரமாகக் கொண்டு "கவலை இல்லாத மனிதன்" படத்தைத் தயாரித்தார்.

படம் தோல்விப் படம்தான்.

ஆனால் சந்திரபாபு இனி கதாநாயகனாக மட்டுமே நடிப்பேன் என அறிக்கை விட இந்தப்படம் காரணமாகியது.

இந்தப் படம் தோற்றதும் மெதுவாக "பொலிஸ்காரன் மகள்" படத்தில் நகைச்சுவை வேடத்துக்கே திரும்பிவிட்டார்.

இருந்தாலும் பின்னர் "தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற படத்தைத் தயாரித்து இயக்கினார்.

தானும் முக்கியமான பாத்திரத்தில் நடித்தார்.

ஆனால் அது நகைச்சுவை வேடமாக இருக்காமல் குணச்சித்திர வேடமாக இருந்தது. இது ரசிகர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. படம் தோல்வி கண்டது. அவர் ஆசையாகக் கட்டிய வீட்டையும் இழக்க வைத்தது. கடனாளியாகினார். இதோடு விட்டிருக்கலாம். எம். ஜி. ஆரை வைத்து "மாடி வீட்டு ஏழை" என்ற படத்தை தொடக்கினார்.

எம். ஜி. ஆர். படங்கள் அவரது நாயக பிம்பத்தைச் சார்ந்தே இருக்கவேண்டும் என்பதே எம். ஜி. ஆர். பாணி. இதனால் இருவருக்கும் முரண்பாடு தோன்றி படம் நின்றுவிட்டது.

சந்திரபாபு மேலும் கடனாளியானார். மீளவே இல்லை. கால ஓட்டம் சந்திரபாபுவை சினிமாவிலிருந்து வெளியே தள்ளியது .

நீதி, அவன்தான் மனிதன் போன்ற படங்களில் சிவாஜி வாய்ப்பு வழங்கினபடியால் இறுதிக் காலத்தில், ஏதோ நடிக்க முடிந்தது.

இதில் ஏதோ ஒன்றுதான் அவரது இறுதிப்படம்.

திருமண வாழ்க்கை சீராக அமையவில்லை. நாகேஷ், சோ ஆகியோரின் வரவு காரணமாக இவரை திரைத்துறை ஒதுக்கி இருந்தது. தயாரிப்பாளர்களை மதிப்பதில்லை, இதனால் வாய்ப்புகள் குறைந்து விட்டன "கவலை இல்லா மனிதன்"(சந்திரபாபு) குடிக்கு அடிமையாகி ,46 வயதில் இறந்து போனான்.

வாழ்வைக் கொண்டாடத் தெரியாத கலைஞன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியாறு:

## தவிக்கும் வடக்கின் தாகம் தீர்க்குமா?

○ மு.தமிழ்ச்செல்வன்

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பின் தகவல்களின்படி உலகில் வாழ்கின்ற சுமார் 8 பில்லியன் மக்களில் 2.2 பில்லியன் மக்கள் சுத்தமான மற்றும் போதுமான குடிநீர் இன்றிக் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்று பேரில் ஒருவருக்குப் பாதுகாப்பான குடிநீர் இல்லை.

இன்னும் சில வருடங்களில் இந்த 2.2 பில்லியன் மக்களுடன் யாழ்ப்பாணம் மக்களும் இணைந்துகொள்வார்கள் என்ற நிலைமையைத் தற்போது தடுத்திருக்கிறது பாலியாறு. பாலியாறு குடிநீர்த்திட்டமானது வடக்குக்கு தண்ணீர் வழங்குகின்ற மிகப்பெரிய திட்டம். வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களுக்கும் பாலியாறு குடிநீர்த் திட்டம் மூலம் நீர் வழங்கல் மேற்கொள்ளப்படவிருக்கிறது.



இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஏனைய நான்கு மாவட்டங்களில் உள்ள சனத்தொகையை விட யாழ்ப்பாணத்திலேயே அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அங்கு சுமார் 6 இலட்சத்து 26 ஆயிரம் மக்கள் உள்ளனர். இங்குள்ள மக்கள் முழுக்க முழுக்க தங்களது நீர்த்தேவையை நிலத்தடி நீரின் மூலமே பூர்த்தி செய்து வருகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரோ பாதுகாப்பற்றதாக மாறிச்செல்கிறது. குடாநாடு என்பதனால் நன்னீர் உவராக மாறும் தன்மை அதிகரித்து செல்வது. அதிக சனத்தொகை என்பதனால் அடர்த்திமிக்க குடியிருப்புகள் காரணமாக நிலத்தடி நீர் மாசுபடுதல் (மலக்கழிவுகள் நிலத்தடி நீரில் அதிகம் கலத்தல்), நிலத்தடி நீர் குறைவடைந்து செல்வது போன்ற நிலைமைகளால் யாழ்ப்பாணத்தின் குடிநீர் என்பது இன்னும் சில வருடங்களில் கேள்விக்குள்ளாகும் நிலையிலேயே இருக்கிறது.

வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் குளங்கள், ஆறுகள் என்பன அதிகமாகக் காணப்படுகின்றன. அதனால் அந்தந்த மாவட்டங்களில் மக்கள் தங்களது நீர்த்தேவைக்கு நிலத்தடி நீரை மட்டுமன்றி ஆறுகள்,குளங்களையும் பயன்படுத்தி வருகின்றனர் .

ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமை இல்லை. இதன்காரணமாக யாழ்ப்பாணத்தின் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவை தொடர்பில் பல காலமாக அதிக கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

யாழ்ப்பாணத்தின் நீர்த்தேவையைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளபோதும் அவற்றின் சாதக பாதக காரணிகளைக் கருத்தில் கொண்டு பாலியாறு திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் அரசாங்கம் முன்னாயத்த நடவடிக்கைகளுக்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

### பாலியாறு குடிதண்ணீர் திட்டம்

இலங்கையின் வடக்கே வட மாகாணத்துக்குள் காணப்படுகின்ற ஓர் ஆறுதான் பாலியாறு. 68.4 கிலோ மீற்றர் நீளமுள்ள பாலியாறு வவுனியா மாவட்டம் புளியங்குளத்தில் ஆரம்பித்து வடக்கு மற்றும் வடமேற்குத் திசை நோக்கி முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைக் கடந்து கடலுக்குள் கலக்கிறது.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாற்றை வழிமறித்து 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ள நீர்த்தேக்கமே பாலியாறு குடிநீர்த்திட்டத்தின் மூலாதாரமாகும். 1 இலட்சத்து 18,363 ஏக்கர் (479 சதுர கிலோ மீற்றர்) பரப்பளவு நீரேந்துப் பிரதேசங்களில் வருடந்தோறும் 1317 மில்லி மீற்றர் சராசரி மழைவீழ்ச்சியிருந்து கிடைக்கப்பெறுகின்ற நீரைக்கொண்டு 2562 ஏக்கர் பரப்பளவில் இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்படவுள்ளது. தற்போது இவ்வாறு கிடைக்கப்பெறுகின்ற மழை நீரானது வருடத்துக்கு 151 எம்.சி.எம். அளவு எந்தவிதப் பயனுமின்றி வீணாகக் கடலில் சேர்கிறது. பல மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியாறு நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டால் அதிலிருந்து குடிநீர்த்தேவைக் காக வருடம் ஒன்றுக்கு 41.2 எம்.சி.எம். அளவு நீர் பெறப்படும். ( அதாவது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் மீற்றர் கியூப் நீர் குடி நீருக்காக பெறப்படும்)

### பயன்பெறும் பிரதேசங்கள்

பாலியாறு குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளும் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

### திட்டத்தின் ஏனைய நன்மைகள்

பாலியாறு குடிநீர்த்திட்டத்தால் பின்வரும் நன்மைகள் ஏற்படும் திட்டம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- 358 ஹெக்ரேயருக்கு விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசனம்
- வருடம் ஒன்றுக்கு 800,000 மெற்றிக் தொன் மீன் பிடி
- சுற்றுலாப் பயணிகள் வருகையின் மூலமான வருமானம்
- மிதக்கும் சூரியசக்தி மூலமான மின்சார உற்பத்தி
- சுற்றுச்சூழல் நன்மை கருதி செக்கனுக்கு 8 மீற்றர் கியூப் நீர் வெளியேற்றப் படுகின்றமை
- நிலம் உவராகி வருகின்றமையைத் தடுத்தல்
- நீர் தேங்குவதன்மூலம் ஏற்படும் மக்களின் குடிப்பெயர்ச்சி இன்மை

### திட்டத்தின் சவால்கள்

- பாலியாறு திட்டம் நடைமுறைக்கு வருகின்ற போது நீர் சேமிக்கப்படுகின்ற 2562 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகின்ற அடர்த்தியற்ற ஒதுக்கப்பட்ட காடுகள் நீருக்குள் சென்றுவிடுகின்ற நிலைமை ஏற்படும்.
- நீர்த்தேக்கப்பகுதிகள் ஒதுக்கப்பட்ட காடுகள் என்பதனால் வனவளத் திணைக்களத்தின் அனுமதி பெறுவது
- இந்தப் பெரிய முதலீட்டுத் திட்டத்துக்கான நிதி மூலங்களைக் கண்டுபிடித்தல்

### வடக்கு குடிதண்ணீருக்கான பொருத்தமான திட்டம்

மேற்படி இந்த திட்டமானது ஒப்பீட்டு ரீதியில் வடக்கின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு பொருத்தமான திட்டமாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கான குடிநீருக்கு ஆறுமுகம் திட்டம், இரணைமடுத் திட்டம், கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம், வடமராட்சி நீர்த்தேக்கம் எனப் பல திட்டங்கள ஆராயப்பட்டன. ஆனால் அந்தத் திட்டங்களில் எல்லாம் பல்வேறு சவால்கள், பிரச்சினைகள் ஏற்பட்டன. நடைமுறைப் படுத்துவதில் சமூக, பொருளாதார, நெருக்கடிகள் உருவாகின.

ஆனால் பாலியாறு திட்டத்தின் மூலம் அவ்வாறான எந்தப் பிரச்சினைகளும் ஏற்படவில்லை, அனைத்துத் தரப்பினரது கருத்துகளும், உள்வாங்கப்பட்டு அவர்களது ஒப்புதலுடன் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதே இதன் வெற்றியாகும். பாலியாறு திட்டத்தின் ஊடான நீர்ப் பங்கீட்டில் கூட எவ்வித சவால்களும் உருவாகவில்லை. ஆகவே பாலியாறு திட்டம் குடிநீருக்கு தவிச்ச வடக்குக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் வழங்கும் ஒரு பொருத்தமான திட்டமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org